aat SRI LANKA Final Stage
August 17
Veal Biz. Colg.
0777 555 738 / 026 222 7622

அறைவு 02 இயம் 02 August 10 - 16, 2013

# மலைமுரசு
MALAIMURASU
வார இதழ்
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

## கனேடியத் தமிழர் பேரவை விக்னேஸ்வரனுக்கு ஆதரவு

கனேடிய தமிழர் பேரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண பிரதம வேட்பாளர் சி.வி விக்னேஸ்வரனின் நியமனத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

## கொரனோ வைரஸ் தொற்றை ஒட்டகங்களே ஏற்படுத்தியுள்ளன

மரணம் தரத்தக்க கொரனோ வைரஸ் தொற்றை மனிதருக்கு ஏற்படுத்தியது ஒட்டகங்களே என ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

## த.தே.கூ அன்றே சிந்தித்திருந்தால் தமிழர் கையேந்தியிருக்கத் தேவையில்லை

த.தே.கூ அன்று தமிழ் தேசிய பிரகடனத்தினை முன்வைக்கின்ற போது அதன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து செயற்பட்டிருந்தால் இன்று தமிழ் மாணவர்கள் மரத்தின் கீழும், நிலத்திலும் இருந்து கற்கும் இத் துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது என சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

## நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்



ஊடகவியலாளர்கள், விற்பனையாளர்கள், கிழக்குவாழ் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் மலைமுரசு தனது மனங்கனிந்த பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. (படத்தில்: பாத்திமா ஸீனா, பாத்திமா லீனா)

# படகு விபத்தில் சிக்கிய குடும்பத்தினர் எங்கே???

திருகோணமலையிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிப் பயணமான நகைக்கடை உரிமையாளரின் குடும்பத்தின் நிலை தற்போதுவரை தெரியவரவில்லை என அக் குடும்பத்தின் உறவினர் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகத் தெரியவருவது யாதெனில் ஏற்கனவே சில மாதங்களுக்கு முன் அந் நகைக்கடை உரிமையாளரும் அவரது மூத்த மகனும் அவுஸ்திரேலியாவிற்குப் படகில் சென்று சேர்ந்து விட்டதாகவும் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவரது மனைவியும் பெண்குழந்தையொன்றும், ஆண்குழந்தையொன்றும் அவுஸ்திரேலியப் பயணத்தை மேற்கொண்டதாகவும், அவர்கள் பயணம் செய்த படகே அண்மையில் ஜாவாக் கடற்பிரதேசத்தில் பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாகவும் தெரிகின்றது.

விபத்தின் பின்னர் தற்போதுவரை அவர்களிடமிருந்து செய்தியெதனையும் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் அவ் உறவினர் தெரிவித்தார். 15

# கடலில் கத்தி வெட்டு



கிண்ணியா, பைசர் நகர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் இலங்கைத்துறை முகத்துவாரக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அதிவேகப் படகுகளில் வந்த சிலரால் சரமாரியான கத்தி வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளனர்.

03.08.2013ல் நடைபெற்ற இக் கத்திவெட்டில் காயமடைந்த றஹ்மதுள்ளா (37), பசருள்ளா(24), ஜவாத் (40) ஆகிய மூவருமே இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். றஹ்மதுள்ளாவின் தலையில் கத்தி வெட்டு விழுந்துள்ளதுடன் பசருள்ளா கம்பியொன்றால் தாக்கப்பட்டு நினைவின்றி விழுந்துள்ளார். ஜவாத், வலையிழுக்கும் இரும்புக் குத்தூசிக் கொழுக்கியினால் காலில்.... 15

## கடாய் வெட்டிப் புதையல்...

சுபநேரத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 7பேரைக் கந்தளாய் காவல்துறையினர் கைது செய்ததுடன் மிருகப்பலி கொடுத்து புதையல் எடுப்பதற்காக உபயோகிக்கப்படும் அனைத்து பொருட்களையும், கடாய் ஒன்றையும் அவர்கள் கைப்பற்றினர். 15

# விற்பனையிலிருந்து தொகுதி இலக்கம் 1076103 அகற்றப்படுகின்றது

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களில் “டைசயனமைட்” என்னும் நச்சுப் பதார்த்தம் கலந்திருப்பதாக வெளியான ஆய்வு முடிவுகளை அடுத்து முன்னுக்குப் பின் முரணாகச் செய்திகள் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

“அங்கர்” பால்மா வகைகளை உற்பதி செய்யும் நிறுவனமான பொன்ரா நிறுவனம் தனது உற்பத்திகளில் இரண்டு வகையான உற்பத்திகளின் குறித்த தொகுதிகளை (பட்ச் - ) மட்டும் 10.08.2013 முதல் விற்பனை நிலையங்களிலிருந்து அகற்றுவதற்கான முடிவை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. இம்முடிவு சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படவதாகவும் அந் நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் முடிவினால் குழந்தைப் பால்மாவான “அங்கர்




பிளஸ்” என்னும் பால்மாவின் 1076103 ம் இலக்கத் தொகுதியும் 0605C0883 தொகுதி வளர்ந்தோருக்கான அங்கர் பால்மாவும் சந்தையிலிருந்து அகற்றப்படவுள்ளது.

தமது உற்பத்திகள் நுகர்வுக்குரிய உச்சப் பாதுகாப்புக் கொண்டவை என பொன்ரேறா பிராண்ட்ஸ் லங்கா லிமிட்டெட் விளம்பரங்களையும் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது. இதற்கு எதிராக தனிநபரொருவரால் மேற்கொள்ளப்பட்ட முறையீட்டை விசாரணைக்க எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் அவ்வாறான விளம்பரங்களுக்கு இடைக்காலத் தடையொற்றை விதித்துள்ளது.

தமது உற்பத்திகள் 100 சதவீதம் பாதுகாப்பானவை... 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 - 0777555738

## வணக்கம்

### கடவுளின் அளவுகோல் எது?

வைதேகி சிவச்செந்திநாதன் அவர்களின் 1ம் ஆண்டு நினைவு மலர் கிடைக்கப் பெற்றேன்.

அம்மலரில் கடவுளின் அளவு கோல் எது என்ற தலைப்பில் அவர் மரணிக்கும் தருவாயில் வாசித்திருந்த விடயம் யாதெனில் "எத்தனை தடவைகள் பிரார்த்தனை செய்யப்பட்டது, எத்தனை தடவைகள் மந்திரங்கள் செபிக்கப்பட்டன, எத்தனை தடவைகள் ........... போன்ற மனிதரின் செயலகளைத் தெய்வீக அளவுகோல்கள் மதிப்பிடுவதில்லை" என்ற தெளிவான விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறாயின் கடவுளின் அளவுகோல் எது? என்ற கேள்விக்கும் அப்புத்தகத்தில் பதிலிருந்தது. சுருக்கமாக கூறினால் நீங்கள் மற்றைய மனிதருடன் எப்படி வாழ்கின்றீர்கள் என்பதைக் கொண்டுதான் கடவுள் உங்களை மதிப்பிடுகின்றார்.

எனில் கடவுளைக் காண வேண்டுமாயின் நாம் காணும் மனிதரில்தானே காண வேண்டும்?

ஆக நாம் எவ்வளவு செலவு செய்து விழாக்களை எடுக்கின்றோம் என்பதை கடவுள் கணக்கில் எடுக்கப் போவதில்லையா? அவ்வாறு பெரு விழா எடுக்கும் செலவுகளை விடுத்து அதே கோயில்களின் முன்றலில் ஒரு நேர உணவுக்காக பிச்சையேந்தும் மக்களை ஆதரித்தால் கடவுளில் அளவு கோலில் நாம் மேலெழுந்து விடலாமோ?

அதைத் தானா சைவ சித்தாந்தம் கூறுகின்றது?

அதே புத்தகத்தில் மேலும் பயணித்தபோது மற்றவர்களுடைய அங்கீகாரத்திற்காக, சமூக மரியாதைக்காக வாழும் மனிதர்களின் மனங்களில் என்றும் அமைதியின்மையே குடிகொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விரு விடயங்களும் ஒரே அச்சில் சுழல்வதாகவே எனக்குப் படுகின்றது.

பெருஞ்செலவு செய்து கடவுளைக்காண நாம் விளையும் முயற்சியெல்லாம் கடவுளை நோக்கியதல்ல என்பதை நாம் அனைவரும் அறிவோம். அம்முயற்சி மற்றையவர்களின் அங்கீகாரத்தை வேண்டி நிற்கும் முயற்சியாகவும், புகழுக்கான அடித்தளமாகவுமே இருக்கும்.

கடவுள் சிலைகளில் இருக்கின்றார் என்பதை நம்பும் நாம், நம்மருகிலிருக்கும் மனிதரிலும் இருக்கின்றார் என்பதை நம்ப மறுக்கின்றோம். எனினும் "தூணிலும், துரும்பிலும்" இருப்பான் அவன் என பாடஞ்சொல்லிக் கொடுப்பதை மட்டும் இன்னும் நிறுத்தவில்லை.

ஒருகணம்.... ஒரே கணம் இந்த உண்மையை நினைத்துப் பாருங்கள்.

உடனேயே மறந்தும் விடுங்கள்... மனிதர்கள்தானே நாம்....

வாருங்கள் கடவுளைக் காண இசை நிகழ்ச்சியொன்றுக்குச் செல்வோம்.

"காலம் நமக்கொரு பாட்டெழுதும்"

ஆ-ர்

# "அட்டாளைச்சேனை நீக்கப்பட்டதற்கு அமைச்சரே காரணம்"

அட்டாளைச்சேனைத் தவிசாளர் குற்றச்சாட்டு

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ரீ.எப்.சீ கூட்ட மண்டபத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜெய்க்கா நிறுவனத்தினத்தினூடாக பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் அட்டாளைச்சேனை தெரிவு செய்யப்பட்டு பின்னர் நீக்கப்பட்ட விடயம் பலத்தவாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்ட விடயமாக காணப்பட்டது.

ஜெய்க்கா திட்டம் தொடர்பாக அதன் திட்டப்பணிப்பாளர் விளக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தபோது, குறுக்கிட்ட மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் ஏற்கனவே இப் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்த அட்டாளைச்சேனை பிரதேசம் எவ்வாறு தற்போது அப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு தானாகவே முன்வந்து பதிலளித்த அமைச்சர் உதுமாலெப்பை இப்பட்டியலில் ஒருபோதும் அட்டாளைச்சேனை உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்றும், தான் அட்டாளைச்சேனை பிரதேசத்தை பட்டியலில் இருந்து நீக்கி, அட்டாளைச்சேனையின் அபிவிருத்திக்குத் தடையாக இருந்ததாகவும், தனது சொந்தத் தாயை காட்டிக் கொடுப்பதற்கு இது ஒப்பானது எனவும் ஊடகங்களில் எனக்கெதிராக திட்டமிட்டு சிலர் பொய்யான பிரச்சாரங்களை முன்னெடுப்பதோடு சில அதிகாரிகள் வேண்டுமென்றே தான்தோன்றித்தனமாக செயற்பட்டு சிக்கல்களை உருவாக்குவதாகவும் அமைச்சர் விசனம் தெரிவித்தார்.



அமைச்சர் உதுமாலெப்பை அதிகாரிகள் என்று இங்கு குறிப்பிட்டது தன்னையே என்றும், அதனால் தான் இதற்கு பதிலளிக்க வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்ட முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், இதன்போது ஒரு கடிதத்தை சபையின் பார்வைக்கு கொண்டுவந்தார்.

15

# "பிரதான வீதி மக்கள் விக்னேஸ்வரனுக்குக் கடிதம் ?"

திருகோணமலை பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் பணிகளில் தாம் இழந்த சொத்துக்களுக்கு நட்டஈட்டை வழங்க ஆவன செய்யவேண்டும் எனக்கோரிக் கடிதமொன்று அம்மக்களின் சார்பில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைப் பிரதம வேட்பாளர் திரு.சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

திருகோணமலை நகர சபையினால் வீதி அகலமாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது அப் பிரதான வீதியில் குடியிருக்கும் மக்களின் மதில்களும் சில இடங்களில் வீடுகளும் உடைக்கப்பட்டு வீதி அகலிப்புக்காகக் காணி பெறப்பட்டது, எனினும் அதற்கான நட்டஈட்டை வழங்க முடியாது என நகரசபை அம்மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இவ்விடயம் வழக்குமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவ் வழக்கு தள்ளுபடி செய்யப்படதெனினும் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துபேசி பொருத்தமான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள சம்பந்தப்பட்ட அனைவரும் முயற்சிக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டிருந்ததாக வழக்காடிய பொதுமகன் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார். எனினும் தற்போது வரை சமரச நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாததால் தாம் வடமாகாண சபைப் பிரதம வேட்பாளருக்கு தமது குறைகளிலிருந்து நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு கோரிக் கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

விக்னேஸ்வரனால் உங்களது குறைகளை களைய முடியுமா? எனக் கேட்டபோது, தற்போதைய நிலையில் முடியாது போனாலும் இக் கடிதத்தின் ஊடாக அவருக்கு தகவலொன்றைச் சொல்லவே தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் எமக்குத் தெரிவித்தார்.

# சனாதிபதி சாரணர் விருது வென்றார் தி-கோணேஸ்வரா மாணவன் ம.விவேக்ஸன்

தி-இ.கி.ச கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 2வது திருமலை சாரணர் குழுவின் மாணவனான விவேக்சன் சனாதிபதி சாரணர் விருதினை பெற்றுள்ளார். இவருக்கான பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுத் தலைவர் திரு. நாயகம் சிற்றம்பலம் அவர்கள் அதிதியாகக் கலந்துகொள்ள நிகழ்ந்துள்ளது. படத்தில் மாணவனுக்கு பாடசாலை அதிபரும் மாவட்டச் சாரணர் ஆணையாளருமான பத்மசீலன் பதக்கம் அணிவிப்பதையும் அருகில் சாரணர் தலைவர் சி.சசிகுமார் மற்றும் உதவிச் சாரணர் தலைவர் ரூ.ஜனோஸ் ஆகியோரையும் காண்க.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மலேரியாவை இல்லாதொழிப்போம்"

(அனுரஸ்ரீ-உதயராஜ்)

05.08.2013 திங்கட்கிழமை அன்று சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மலேரியா நோய் சம்பந்தமாக விழிப்புணர்வுப் பிரச்சாரம் திருமலை வீரநகர் கிராமத்தில் இடம் பெற்றது.

இப் பிரச்சாரம் காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகி 12.30 மணிவரை இடம் பெற்றது.

2014ம் ஆண்டோடு இந்நோயினை முற்றாக அழிக்க வேண்டும் எனும் நோக்கில் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி திருமதி.மன்சூர் அவர்களின் தலைமையில் 9 பேர் கொண்ட குழுவினர் இக்கிராமப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடு வீடாக நேரடியாகச் சென்று இந்நோய் சம்பந்தமான விடயங்களையும், அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளை பற்றியும் எடுத்துக் கூறினர்.

அத்துடன் இக்கிராமவாசிகளை இந்நோயிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்தினர்க்கும் 01 வலை வீதம் மொத்தமாக 250 நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

இப்பாதுகாப்பு வலைகளை தொடர்ச்சியாக பயன்படுத்தும் பட்சத்தில் இந்நோயினை முற்றாக அழிக்கலாம் எனவும் இவ்விழிப்புணர்வுப் பிரச்சாரத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் இவ்வலைகளில் நோய்த் தடுப்பு மருந்துகள் பூசப்பட்டுள்ளதால் இதனை சாதாரண குளிர்ந்த நீரில் அலசி வெயில் படாதவாறு நிழலில் காய வைப்பதின் மூலம் ஐந்து ஆண்டுகள் வரையில் இவ்வலைகளைப் பயன்படுத்த முடியும் என்பதையும், சவர்க்காரமோ அல்லது வேறு ஏதேனும் பொருட்களை பயன்படுத்தி கழுவுவதன் மூலம் இதன் மருந்துத் தன்மை இழக்கப்படும் எனவும் தெரியப்படுத்தப்பட்டது.

## "செல்வநாயகபுரம் பாடசாலையின் வீதி..."

(அனுரஸ்ரீ-உதயராஜ்)




திருமலையில் இருந்து நிலாவெளிக்குச் செல்லும் வழியில் 3ம் கட்டை சந்தியில் இருந்து செல்வநாயகபுரத்திற்குச் செல்லும் பிரதான பாதை முதல் செல்வநாயகபுரம் தி/ இந்து மகா வித்தியாலயம் வரையில் உள்ள பாதை மிக மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதனால் தொழில் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் வரை அனைவரும் மிகவும் அசௌகரியமான நிலையை எதிர்நோக்குகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பல தடவைகள் அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் தற்போது வரையில் இக்கிராம மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக நிரந்தர தீர்வு எடுக்கப்படாமை கவலைக்குரிய விடயமாக உள்ளதாக இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரையில் 3ம் கட்டையில் இருந்து கிறிஸ்தவ தேவாலயச் சந்தி வரையில் வெறும் சுமார் 500மீற்றர் பாதை மட்டுமே (கொங்கிரீட்) சரி செய்யப்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இச்சந்தியில் இருந்தே பாடசாலை வீதியும் ஆரம்பமாகின்றது.

## அறுகம்பையில் எரிக்கப்பட்டது "வைநொட்" உணவகம்

பொத்துவில் காவல்துறைக் கண்காணிப்பிற்கு உட்பட்ட அறுகம்பை உல்லாசபுரியின் பிரபல்யமான உணவு விடுதியான வைநொட் விடுதி விசமிகளித் தாக்குதலுக்கு இலக்காகி தீயில் எரிந்துள்ளது.

இந் நெருப்பெரிப்புச் சம்பவத்திற்கு பெற்றோல் பாவிக்கப்பட்டுள்ளதாக உணவு விடுதி உரிமையாளர் முஹம்மது சாஜஹான் தெரிவித்தார்.

உல்லை, அறுகம்பை உல்லாசபுரியானது உலகப் புகழ்பெற்ற சுற்றுலாப் பயணிகளின் தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமையலறை நெருப்புக்கு மட்டு இளைஞன் பலி

சவூதி அரேபியாவில் பணியாற்றிவந்த மட்டக்களப்பைச் சேர்ந்து இளைஞன் ஒருவன் தங்குமிடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் பலியாகியுள்ளார்.

வேலை முடிந்து வந்து தனக்கான உணவைத்தயாரித்துக் கொண்டிருந்து போது தவறுதலாகச் சமையலறையில் தீ பற்றியதால் இவ் இளைஞன் பலியாகியுள்ளார். நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த செல்வராசா ரமேஸ் என்ற 26 வயது இளைஞனே பலியானவராவார்.

இவர் கடந்த 2012ம் ஆண்டிலேயே சவூதிக்கு வேலை பார்க்கச் சென்றிருந்தார் எனத் தெரியவருகின்றது.

## தண்டனைக்கெதிராக நீதிமன்றில் பாட்டிசைத்தார் பிக்கு

போக்குவரத்துச் சட்டங்களை மீறியதுடன் மது போதையிலும் வாகனத்தைச் செலுத்தியமைக்காக தண்டனை வழங்கிய பெண் நீதிபதியைப் பார்த்துப் பாட்டொன்றைப் பாடி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளார் பிக்கு ஒருவர்.

வாகன அனுமதிப் பத்திரமின்மை மற்றும் குடிபோதை ஆகிய குற்றங்களை இழைத்த இப் பிக்குவிற்கு அபராதமாக 13,500 ரூபாவைத் தண்டமாக மஹவ பிரதான நீதியாளரான பெண் நீதிபதி விதித்துள்ளார்.

அத்தண்டணை அறிவிப்பைக கேட்டவுடன் " அம்மாவா பெண், மனைவியா பெண், அக்காவா பெண்" என்ற உரத்த குரலில் அப்பிக்கு பாடத் தொடங்கியதாக செய்தித்தளமொன்று தெரிவிக்கின்றது. அதற்கு மேலும் பாட முடியாதபடி வாயைப் பொத்திய காவல்துறையினர் அவரை நீதிமன்றை விட்டுத் தூக்கிச்சென்றனராம்.

## "சுப்பர் சிங்கர்" பாடகர்கள் திருமலையில்



திருகோணமலை 10ம் குறிஞ்சி ஸ்ரீ கம்பனிப் பிள்ளையார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு 7.08.2013 புதன் அன்று பூங்காவனத் திருவிழாவில் தென்னிந்திய விஜய் தொலைக்காட்சி சுப்பர் சிங்கர் புகழ் சந்தோஷ், ரக்ஷிதா இவர்களுடன் நம் நாட்டு சக்தி தொலைக்காட்சி இசைக் கலைஞர்களான பிரஷாந்தினி, ராஜ் போன்றவர்களும் மற்றும் இலங்கையின் முன்னணி இசைக்குழுவான " சித்தாரா" குழுவினர். ஆகியோர் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சி நடைபெற்றது..





ஸ்ரீகம்பனிப்பிள்ளையார் ஆலய உற்சவத் தேர்த் திருவிழா

(யாழினி-அனுர-உதயா)

## "முஸ்லிம் சட்ட நூலாசிரியருக்குப் பாராட்டு"

சிலோன் முஸ்லிம் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு 05.09.2013ல் அக்கரைப்பற்று ரீ.எப்.சீ. கூட்ட மண்டபத்தில் அமைப்பின் தலைவர் பஹத் ஏ. மஜீட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பிக்குகள் பல்கலைக்கழகத்தின் பேராசியரும் முஸ்லிம்களின் நீதி தொடர்பாக எழுதிய "முஸ்லிம் சட்டம்" நூலாசிரியருமான டாக்டர் கருணாரத்னவுக்கு அட்டாளைச் சேனை பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சிலினால் பொன்னாடை போர்த்தி கௌரவமளித்தார்.அத்துடன் ஊடகவியலாளர் றிஸ்விக்கு இந்த ஆண்டின் சிறந்த முஸ்லிம் ஊடகவியலாளர் 2013 எனும் விருதினை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் வழங்கி கௌரவித்தார்.



அக்கரைப்பற்று மாநகர சபை எதிர் கட்சித் தலைவர் எஸ்.எல்.எம். ஹனிபா மதனி தைக்கா நகர் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அதான் ஒலிக்கும் நேரத்தை கணிக்கும் கடிகாரத்தை அதன் தலைவரிடம் வழங்கிச் சிறப்பித்தார்

(ஒலுவில் - எம்.எல்.எம்.பாரீஸ்)

நிலாவெளி-கோபாலபுரம் (10ம் கட்டை) பிரதான வீதியிலுள்ள விடுதி வசதிகளுடன் கூடியசித்த ஆயுள்வேத வைத்தியமனையானது கடந்த 2010 ம் ஆண்டு நெக்டப் நிதியுதவியுடன் கட்டப்பட்டதாகும்.

இம்மருத்துவமனையை பொறுத்தவரை நிலாவெளி, குச்சவெளி பிரதேசங்களிலிருந்து மட்டுமன்றி திருமலை நகர்ப்பகுதி மக்களும் வெளி நோயாளராகவும், தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காகவும் வருகின்றனர். இம்மருத்துவ மனையிலே வைத்தியர்களும் தாதியரும் கடமைபுரிகின்றனர்.

ஆனாலும் ஆண்,பெண் நோயாளர்கள் தங்கும் வசதி கொண்ட இம்மருத்துவ மனையைப் பொறுத்தவரை போதிய பராமரிப்பின்றி காணப்படுவது கவலைக்குரியதாகும்.

குறிப்பாக மின்விசிறிகள்,மின் விளக்குகள் [illegible] பொருத்தப்பட்ட போதும் [illegible] ஒன்றிரண்டை தவிர ஏனையவை பழுதாகி இருக்கிறது. மலசலகூடங்களின் சுத்த,சுகாதாரநிலை மிக மோசமாக இருக்கிறது. இத்துடன் வைத்தியமனை வளாகமும் குப்பைகூளங்களுடன் காட்சியளிக்கிறது.

நோயாளருக்கான உணவுகளும் சரியான அளவில் கிடைப்பதில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது



எமது நிருபர்



நிலாவெளி ஆயுர் வேத வைத்தியசாலையின் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் முதலமைச்சரிடம் கிழக்குத் தமிழரின் எதிர்பார்ப்பு என்ன?

-மாயன்-

மாகாணசபை முறைமை ஆரம்பமாகி இருபத்தைந்து ஆண்டு-களுக்குப் பின் ஈழத்தின் வடக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற ஏற்பாடுகள் நடந்தேறியுள்ளன.

வடக்கில் தேர்வாகும் மாகாண சபையின் முதலமைச்சரின் மீதான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டே போகின்றது.

அவர்களது எதிர்பாப்பின்படி வடக்கின் முதலமைச்சரை ஓர் ஆபாத்பாண்டவனாக -அதாவது துன்பங்களை எதிர்கொண்டுள்ள மக்களை அத்துன்பங்களிலிருந்து காப்பவனாக- காணவே அவர்கள் முற்படுகின்றார்கள்.

அவ்வாறே அவர் வடக்கின் முதலமைச்சராக இருந்தாலும் கிழக்கில் வாழும் தமிழர்களின் ஆத்மார்த்த எதிர்பார்ப்புக்கள் சிலவற்றை நிறைவேற்றும் பண்புள்ளவராக அவர் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் மேலோங்கி நிற்கின்றது.

பொதுவாகவே வட மாகாணத்தில் தெரிவாகவுள்ள முதலமைச்சரை மட்டுமே ஈழத்துத் திசைகளெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தமது முதலமைச்சராகக் கருதுகின்றார்கள் என்பதே இங்கு முக்கியமானது.

கிழக்கின் முதலமைச்சர், மதத்தால் முஸ்லிம் மதத்தைச் சார்ந்திருப்பினும், மொழியால் தமிழராக இருந்தாலும் கூட அவரைத் தமிழர்களின் முதலமைச்சர் என ஏற்றுக்கொள்ள முடியாத நிலை தமிழர்களுக்கு இருக்கின்றமைக்கான காரணம் யாதென ஆராய்ந்தோமானால் அவர் அரசின் பிரதிநிதியாகவே, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதியாகவே, கிழக்கில் கோலோச்சுகின்றார் என்ற ஒரே காரணமே அவரைத் தமிழ்த் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது என்பது உண்மையே.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பின்னடைவிற்குப்பின் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவின் மற்றொரு அத்தியாயம் ஆரம்பமாகி மெதுவாக சரியான தடத்திற்குள் அவ் உறவு விழும் இக் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் கிழக்கில் முதலமைச்சர் பதவியை ஏற்றிருந்தால் காலவோட்டத்தில் அத் தலைவரைக் கிழக்கின் தமிழ்த் தலைவராக தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பது கண்கூடு. அதனை முன்நிறுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரை "கிழக்கில் ஒன்றிணைவோம் - முதலமைச்சர் பதவி உங்கள் கட்சிக்கே" என்ற அழைப்பை விடுத்திருந்தார். ஆனால் அந் நேரத்தில நிலவிய அரசியல் சூழ்நிலைகளை மட்டும் கருத்திற் கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் அத்திகதியிலான நன்மைகளைக் கணக்கிட்டு அரசுடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைத்தது.

அதனால் தமிழ்த் தலைவரொருவரைக் கிழக்கில் பெறக் கனவு கண்ட கிழக்கின் தமிழர்களின் கனவு பொய்த்துப்போனது.

அக் கனவினை நனவாக்கும் தமிழ் முதலமைச்சர் பதிவியாக வடக்கின் முதலமைச்சர் பதவி திகழும் என்பதே கிழக்கு வாழ் தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருப்பதுடன் அவரையே அனைத்துத் தமிழ் மக்களும் தமது முதலமைச்சராக ஆத்மார்த்தமாகக் கருதப் போகின்றார்கள்

இவ்வுளப்புரிதலை வடக்கின் முதலமைச்சரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே கிழக்குத் தமிழர்களின் முதலாவது எதிர்பார்ப்பாக உள்ளது.

அடுத்து, கிழக்கின் தமிழர்கள் தாம் வடக்கிலிருந்து பிரிக்கப்பட்டே எப்போதும் பார்க்கப்படுவதை விரும்பவில்லை என்பதையும் எப்போதுமே ஈழத்தின் தமிழர்கள் என்றே தாம் பேசப்பட வேண்டும் என்று விரும்புவதையும் இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் கிழக்கின் தமிழர்களுக்கு உருவாகியுள்ளது.

இதற்கான அடிப்படைக் காரணியாதெனில் பேரினவாத அரசுகளின் தெளிவான நீண்டகாலத் திட்டமிடலே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கிரேக்கத்தில் பிறந்து இங்கிலாந்தின் அரச பரம்பரையால் சரியாகக் கையாளப்பட்டு இலங்கைப் பேரினவாதத்தால் முறையாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள "கூறுபோட்டு ஆள்" (Divide and Rule) என்ற தனது அடிப்படைச் சிந்தாந்தத்தில் பயணிக்கும் பேரினவாதமானது மொழியால் ஒன்றுபட்டிருந்த தமிழர்களை திட்டமிட்டுத் சைவ மதத் தமிழர்களாகவும் முஸ்லிம் மதத் தமிழர்களாகவும் பிரித்தெடுத்து விட்டிருந்தது. அதற்குத் தமிழ்ப் போராட்டக் குழுக்களும், முஸ்லிம் பிற்போக்காளர்களும் தம்மையறி யாமலே உதவி புரிந்தனர் என்பது எம் வரலாற்றுச் சோகம்.

பின் தமிழரின் ஆயுதப் போரை பல்தேசத் துணையுடன் நசுக்கிய பேரினவாதம் அத்தோடு நின்று விடாமல் தமிழர்களை மேலும் வடக்கு, கிழக்கு எனப் பிரித்துக் கையாள முற்படுகின்றது. இப் பிரிப்பின் பேரில்தான் வடக்கில் மட்டும் தமிழர்களுக்குப் பிரச்சனைகள் இருப்பதாக ஊடகங்களுக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் தகவல்கள் கசிய விடப்படுகின்றன.



உதாரணமாக வடக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என்ற பேச்சை மட்டும் அனுமதிக்கும் பேரினவாதம் கிழக்கில் இப்போதும் முகாம்களுக்குள் இருக்கும் மக்களை வெளியார் யாருமே சுதந்திரமாகச் சென்று சந்திக்கும் நிலை இல்லை என்ற உண்மையை இருட்டடிப்புச் செய்து விடுகின்றது.

யுத்தவடுக்களைச் சுமந்து அதிலிருந்து மீளமுடியாத பல்லாயிரக் கணக்கான மக்கள் கிழக்கிலும் இன்னும் வாழ்ந்து வருகின்றர்கள் என்பதை பெரிதாக அலட்டிக்கொள்ள அரசு விடுவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந் நிலையிலேயே வடக்கின் முதலமைச்சர் தனியே வடக்கு மக்களின் பிரச்சனைகளை மட்டும் கருத்திற் கொண்டு செயற்பட்டு மேலும் கிழக்கு மக்களை ஈழத்தமிழர்கள் என்ற அணியிலிருந்து பிரித்துப் பார்க்க முயற்சிக்காமல் ஒட்டுமொத்த வடகிழக்கின் பிரச்சனைகளையும் கருத்திற்கொண்டு பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்பே கிழக்கின் மக்களிடையே பரவலாக்க காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதனை ஆணித்தரமாக வெளிக்காட்டுவதற்கு நடந்தேறியுள்ள சம்பவம் ஒன்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

கிழக்கின் திருகோணமலை மாவட்டத்தில் பிரதான வீதியினை அகலமாக்கும் செயற்பாடுகளை திருகோணமலை நகரசபை முன்னெடுத்துள்ளது. அதன்போது உடைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கடைகளுக்குப் பொருத்தமான நட்டஈட்டை வழங்கும் பொறுப்பிலிருந்து நகரசபை விலகியிருப்பதால் நட்டமடைந்தவர்கள் கடிதமொன்றை வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள திரு.சி.விக்னேஸ் வரனுக்கே அக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது.

முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ள நிலையிலேயே விக்னேஸ்வரனிடம் நியாயம் கோரி கிழக்கின் தமிழ் மக்கள் கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றார்கள் என்றால் அவர் முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டால் கிழக்கிலிருந்து எத்தனை கடிதங்கள் அவருக்கு அனுப்பப்படும் என்பதைச் சிந்தித்து பார்க்கலாம்.

இவ்வொரு செயற்பாடே கிழக்குத் தமிழ் மக்கள் வடக்கு முதலமைச்சரின் மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

ஆனால் காலம், வடக்கின் முதலமைச்சரையும் கையாலாகதவராக தமிழ் மக்களின் முன் நிறுத்தப் போகின்றதா?

## வெலிவேரிய ; "முன்னை இட்ட தீ"

வெலிவேரியவில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், உள்ளூரில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் அரசாங்கத்துக்கு எதிரான கண்டன அலைகளைத் தோற்றுவித்துள்ளன. இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில், அரசாங்கம் பல்வேறு காரணங்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளது.

வெலிவேரிய மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில், இறப்பர் கையுறைத் தொழிற்சாலைக் கழிவுகள், குடிநீரில் கலப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சை தான், அங்கு மூன்று பேரின் மரணத்துக்குக் காரணமாகியுள்ளது. அந்தப் பகுதி மக்கள் சுத்தமான குடிநீருக்காக போராடக் கிளம்பிய போது, அதை அடக்குவதற்கு கொமாண்டோக்களை உள்ளடக்கிய இராணுவ அணிகள் களமிறக்கப்பட்டது தான், பெரும் சர்சையாக வெடித்துள்ளது.

இத்தகையதொரு சம்பவத்தை தெற்கிலுள்ள மக்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பதை உணரமுடிகிறது. அதாவது இலங்கை இராணுவத்தினரே, தம்மீது துப்பாக்கிச் சூடு நடத்துவார்கள் என்று அங்குள்ள மக்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்க வில்லை.

கடந்த காலங்களில் ஜேவிபி கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளின் போது, இராணுவத்தினர் தெற்கிலும் கூட பொதுமக்களுடன் கடும் போக்குடன் நடந்து கொண்டிருந்தாலும், அதற்குப் பிந்திய காலத்தில் நிலைமை முற்றிலும் மாறியிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான போராகவே பெரும்பாலானவர்களால் பார்க்கப்பட்ட நிலையில், தெற்கிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் இராணுவத்தினர் பெரிதும் கௌரவத்துக்குரியவர்களாக மாறினர்.

புலிகளுக்கு எதிரான போர், ஜேவிபி கால இராணுவத்தினரின் செயற்பாடு களையெல்லாம் மறந்து, சிங்கள மக்கள் ஒன்றிணையக் காரணமாகியது. இராணுவத்துக்கும் தெற்கிலுள்ள மக்களுக்கும் இடையில் தோன்றியிருந்த இந்த இணக்கமான நிலை, வெலிவேரிய தாக்குதலால் உடைந்து போனது.

1971இலும், 1987-89 காலத்திலும், ஜேவிபி கிளர்ச்சியை முறியடிக்கும் நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அண்மையில், மாத்தளையில் இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில் ஒரு பாரிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட போது கூட, அதன் உண்மையை வெளிக் கொண்டு வரவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் மிகக் குறைவு. பெரும்பாலும் ஜேவிபியினர் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் தான்,அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஐதேக ஆட்சிக்காலத்தில் நடந்த படுகொலைகளாக இருந்தாலும், இப்போதைய அரசாங்கமும் கூட அதில் அக்கறை காட்டவில்லை. காணாமற் போனவர்களின் உறவினர்களே பெரியளவில் அதில் ஈடுபாடு காட்டவில்லை.

ஏனென்றால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரும், அதில் 'அவுர்கள் ஈட்டிய வெற்றியும், இராணுவத்தினர் மீது குற்றம்சாட்ட இடமளிக்கவில்லை. கடந்த காலத்தை மறக்காது விட்டாலும், மன்னித்துக் கொள்ளும் அளவுக்கு சிங்கள மக்களில் அநேகரை கொண்டு சென்றிருந்தது.

ஆனால், வெலிவேரிய தாக்குதல் சம்பவம், இராணுவத்தினரை அவநம்பிக்கையோடு பார்க்கும் நிலையை - வெறுப்போடு நோக்கும் நிலையை உருவாக்கி விட்டுள்ளது. வெலிவேரிய தாக்குதலை, புதுமாத்தளனுக்கும், முள்ளிவாய்க் காலுக்கும், வன்னிப் போருக்கும் ஒப்பிட்டு சிங்கள மக்கள் தெரிவிக்கும் கருத்துகளே இதற்குச் சாட்சி.

இராணுவத்தினர் இந்தளவுக்கு மோசமாகவும், இழிவாகவும் நடந்து கொள்வார்கள் என்று நினைக்கவில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரரே கூறியுள்ளார் என்றால், இது தெற்கில் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது என்று புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது, பொதுமக்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக இராணுவத்தினர் மீது குற்றம்சாட்டப்பட்ட போதெல்லாம், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று இராணுவத் தினரைக் காத்து நின்றவர்களில், அரசதரப்பைத் தவிர வேறு யாருமே, இப்போது அவர்களின சார்பில் பேசவில்லை.

எல்லோருமே ஒரே குரலில், வெல்வேரிய தாக்குதல் தவறானது என்கின்றனர், மோசமாக இராணு வத்தினர் நடந்து கொண்டதாக விமர்சிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய ; "முன்னை இட்ட தீ"

4ம் பக்கத் தொடர்ச்சி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போன்ற இன்னும் சிலர், தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரில் தவறில்லை என்றும், தாக்குதல் நடத்த உத்தரவிட்ட அரசாங்கமே அதற்குப் பொறுப்பு என்கின்றனர். எவ்வாறாயினும், அரசாங்கம் யார் தாக்குதலுக்கு உத்தரவிட்டது என்று வெளிப்படுத்த வில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிக்க, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க உத்தரவிட்டுள்ள போதிலும், அது எந்தளவுக்கு நியாயமாக நடக்கும் என்பதில், நிறையவே சந்தேகங்கள் உள்ளன. இராணுவத்தின் இந்த உள்ளக விசாரணை குறித்து சந்தேகம் எழுப்புபவர்களும், தெற்கிலுள்ள அரசியல்வாதிகளும், கட்சிகளும் தான்.

ஆனால், இதே அரசியல்வாதிகளும், கட்சிகளும், இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற மீறல்கள் குறித்து, இராணுவத்தரப்பு உள்ளக விசாரணை நடத்தியபோது, அது நியாயமாக நடக்காது என்று கூறவில்லை. அது குறித்து சந்தேகம் எழுப்பவில்லை.

பொதுமக்களைக் குறிவைத்து, ஒருபோதும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவேயில்லை என்று இராணுவ விசாரணை நீதிமன்றம் அறிக்கையைக் கொடுத்தபோது, அதை வாயாரப் பாராட்டியவர்கள் தான், இப்போது, இராணுவ விசாரணையில் நம்பிக்கை யில்லை என்கின்றனர்.

தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்குமாம் என்று தமிழில் உள்ள பழமொழியைத் தான் இது ஞாபகப்படுத்துகிறது.

அதுமட்டுமல்ல, வெலிவேரிய தாக்குதல் குறித்த உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கையில்லை என்றும், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஐ.தே.கட்சியே கோரியிருக்கிறது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க ஒரு போதுமே, வன்னிப் போரில் நடந்த மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணையைக் கோரியதும் இல்லை, அத்தகைய விசாரணைக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்ததும் இல்லை.

தாக்குதலில் ஈடுபட்ட படையினர், தாக்கப்பட்ட பொதுமக்கள் என்று முள்ளிவாய்க்காலுக்கும், வெலிவேரியவுக்கும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. இரண்டிலுமே, மனித உரிமை மீறல் என்ற பொதுமையே இருந்தாலும், அது வடக்கில் நிகழ்ந்ததா, தெற்கில் நிகழ்ந்ததா - சிங்களவர் மீதா, தமிழர் மீதா, என்பதை அடிப்படையாக வைத்தே, அதன் பெறுமானம் கணிக்கப்படுகிறது. போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழிந்தாலும், இந்தப் போக்கு மாறவில்லை.

ஒருவகையில், சிங்கள மக்கள், தமிழர்கள் மீதான மீறல்களைக் கண்டிக்காமல் ஊக்குவித்ததன் விளைவு என்று கூட இதனைக் குறிப்பிடலாம். இன்னொரு புறத்தில், வெலிவேரிய தாக்குதலை தமிழ்கட்சிகள் பெரியளவில் கண்டிக்கவில்லை என்பது தவறான அணுகு முறையாகவே பார்க்க வேண்டும்.

தமிழர்களின் உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டன என்ற நியாயத்தை சிங்கள மக்கள் உணர முனையும் போது, அவர்களுடன் இணைந்து கைகோர்ப்பது தான் நியாயமானது, தமிழர்களின் பலத்தை அதிகரிக்கக் கூடியது.

இந்த உண்மை, தமிழர் தலைமைகளால் உணரப்பட வேண்டும். சிங்களக் கட்சிகளும், தலைமைகளும் இழைத்த தவறை அவர்களும் இழைத்து விடக் கூடாது.

**– சஞ்சயனி –**

(நன்றி - தமிழ்மிரர்)

**கல்விக் கூடத்திலிருந்து வந்த மகனைத் துப்பாக்கிச் சூட்டில் பலி கொடுத்த விதவைத்தாய்**



## பேஸ்புக்–நிறையப்பேரைத் தொடர்புறச் செய்யும்

கையடக்கத் தொலைபேசிகள் எமது நாட்டிற்கு பாவனைக்கு வந்த காலங்களில் பலதரப்பட்ட பிரச்சனைகள் உருவாகியதை நாம் அறிவோம்.

இன்றைய தொழில்நுட்ப மேம்பாட்டினால் தொலைபேசிகள் ஊடாக திருட்டுத்தனமான தவறுகள் புரிவது கஷ்டம். அப்படி புரிந்தால் இலகுவாக அகப்படும் வாய்புக்களும் அதிகம்,

தற்போது பேஸ்புக் தலைவலி ஆரம்பமாகியுள்ளது. இதனாலும் பலவித பிரச்சனைகள் ஆரம்பித்துள்ளன. குடும்பங்களுக்குள் ஒற்றுமையின்மையும் பிளவும் தகராறும் ஏற்பட இணையத்தளத்தின் " பேஸ்புக்" காரணமாக உள்ளது.

அதற்கு உதாரணமாக அனுராதபுரத்தை அண்டிய கிராமம் ஒன்றில் ஓர் அமைதியான குடும்பமே அல்லோலகல்லோலப்பட்டு சிதறி சீரழிந்துவிட்டது. கணவன் அதிகாலையில் வேலைக்குப் போய்விடுவார். அதனை தொடர்ந்து மூன்று பிள்ளைகளும் பாடசாலைக்கு போய்விடுவார்கள் இவர்கள் அனைவரும் வீட்டை விட்டு வெளியேறியதும் தனித்திருப்பது அக்குடும்பத்தின் தலைவியான மனைவியே.

தனிமை அவரை வாட்டியது. எப்படியோ தனது நண்பி ஒருவரின் உதவியுடன் இணையத்தள " பேஸ்புக் " மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். இவரின் தனிமையை போக்க அழகான வாட்டசாட்டமான வாலிபர்கள் முன்வந்தனர். அவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்திருந்தது.

நாளடவில் அவர்கள் அனைவரும் குறித்த மூன்று பிள்ளைகளின் தாயாரான முப்பத்தைந்து வயதுடைய குடும்பப் பெண்ணின் காதலர்களாக மாறினர். காதல் முற்றியது இதனால் குடும்பக் காரியங்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

எப்படியோ மோப்பம் பிடித்து கணவன், மனைவியின் நடவடிக்கை களை கண்டு பிடித்து விட்டார். இதனால் தனது பிள்ளைகள் மூவரையும் அவரது பெற்றோர் வீட்டுக்கு கூட்டிச்சென்று அவர்களை அங்கு பாரம் கொடுத்து விட்டு மனைவியை அடித்து வீட்டைவிட்டே துரத்தி விட்டார்.

கை கால் முறிந்த நிலையில் அப்பெண் தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்றார். அங்கு அவருக்கு வரவேற்பு கிடைக்காத பட்சத்தில் பொலநறுவையில் உள்ள அவரின் உறவினர் வீட்டில் தஞ்சம் புகுந்து அங்கு தனது முறிந்த கை, கால்களுக்கு தற்போது வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்.




**ஜே. மரியதாஸ்**

தமிழுக்கு அழகு சேர்க்கும் உவமை, உருவகம், போன்ற அணிகள் சங்க காலத்தில் இருந்தபோதும் சிறப்பாக குறிப்பிடக்கூடிய இறைச்சி, உள்ளுறை பற்றியும் நாம் அறிகின்றோம் அவற்றுள் இறைச்சி எனும் சிறப்பணி அக்காலத்தில் தமிழை அலங்கரித்துள்ள முறையினை அக்காலச் செய்யுள்கள் ஊடக ஆராய்ந்தறிந்து தற்காலத்தமிழிலும் பரீட்சித்துப் பார்ப்பது சாலப் பொருத்தமானது.

# சங்ககாலத் தமிழை அழகுபடுத்திய இறைச்சிப்பொருள்

இறைச்சிப் பொருளூடாக சங்ககாலப்புலவர்கள் தமிழுக்கு அணிசேர்த்துள்ளனர் "இறைச்சி" என்ற சொல் தங்கியிருத்தல் என பொருள்படுகிறது இது "சி" எனும் தொழிற்பெயர்விகுதியைப் பெற்று இறைச்சி என்ற தொழிற்பெயராயிற்று. இதனால் இதனை இறைச்சிப் பொருள் என்றும் சொல்வதுண்டு.

அகத்திணையில் அன்பு நிறைந்த காதல் காரணமாகத் தோன்றும் இன்ப துன்ப மனவெழுச்சிகளை சங்ககாலப் புலவர்கள் அவ்வவ் நிலத்திற்குரிய விலங்கு, பறவை முதலிய அ∴றிணைப் பொருள்களில் சார்த்தி புனைந்து பேசுவது மரபு. இவ்வாறு அவ்வவ் நிலத்தின் கருப்பொருட்களின் பண்பு, செயல் ஆகியவற்றில் திறத்தால் தக்கவைக்கப்படுவதே இறைச்சி ஆயிற்று.

இவ்விறைச்சி கருப் பொருட்களை சிறப்பித்து வருவதன்றி கூறுவோரது உள்ளக் குறிப்பினை உள்ளுறையாகக் கொண்டு வருவதாக அமைந்திருக்கும்.

அதாவது இயற்கைப் பொருளில் ஏற்றி ஒன்றைச் சொல்லும் பொழுது இன்னும் ஒன்று நினைவிற்குவரும் இதனை சமஸ்கிருதத்தில் "தவனி" என்றும் கூறுவர். பாலை பாடிய பெருங்கடுங்கோவின் நற்றிணை 37ம் பாடல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

நசை பெரிது உடையார்
நல்கலும் நல்குவர்:
பிடி பசிகளை இய
பெருங்கை வேழம்
மென்சினை யா அம்
பொளிக்கும்
அன்பன் தோழி
அவர் சென்ற ஆறே.

ஆண்யானை பெண்யானையின் பசியைப் போக்குவதற்காக "யானை" மரப்பட்டைகளை உரிக்கும் இயல்புடையது. அவர் சென்ற பாலை நில வழி இவ்வாறு பெண்யானை மீது ஆண்யானை கொண்டிருக்கும் காதலை - அன்பை உணரும் தலைவன் பிரிவில் வந்துவிடுவான் எனத் தோழி தலைவிக்குக் கூறி அவளை ஆற்றுவிப்பதாகப் புலவர் பாடலை புனைந்துள்ளார். அ∴றிணைப் பொருளான ஆண்யானை பெண்யானை மீது இத்தகைய காதல் கொண்டிருக்குமானால் தலைவியின் மீது தலைவன் எத்தகைய காதலைக் கொண்டிருப்பான்! என்பது இங்கு இறைச்சியாக உய்த்துணரப்படுகிறது.

அதாவது அப்பாலைநிலத்துக் கருப்பொருளைக் கருவியாக்கி தலைவன் காதலின் உச்சமான இயல்பு புனைந்துரைக்கப்படுகிறது.

அகநானூறு என்ற அரும் பொக்கிசத்தில் "கோழிலை வாழைக் கோள் முதிர் .........." எனத்தொடங்கும் பாடலின் இறுதி இரண்டு அடிகளும் இறைச்சிப் பொருளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

" வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்ந்து
கொண்டன்றே''

என்பதே அப்பாடலடியாகும். அதாவது பசுமையான புதர்கள் நிறைந்த வேங்கைமரங்கள் ஒள்ளிய பூங்கொத்துகள் விரியப் பெற்றுள்ளன. வெண்மையான பூரண சந்திரனையும் ஊர் கொண்டுள்ளது. என்பதே அப்பாடலடிகளின் நேரடிப்பொருளாக அமைகின்றது. ஆனால் அகப்பொருள் ஊடாக உய்துணரக்கூடிய பொருள் வேறாகக் காணப்படுகிறது. அதாவது வேங்கை மரங்கள் பூத்துள்ளதால் தினை அறுவடைக்காலம் வந்துவிட்டது இதனால் தலைவி தினைக்காவலுக்காக புனத்துக்கு வரமாட்டாள். எனவே அவளைச் சந்திப்பது கடினம் எனவும், பூரண சந்திரன் பிரகாசிப்பதால் இரவிலும் அவளைச் சந்திக்க முடியாது எனவும் தலைவனுக்கு தோழி குறிப்பால் உணர்த்துகிறாள். இதனுடாக தலைவன் பகலிலும், இரவிலும் தலைவியைச் சந்திப்பதை விடுத்து திருமணம் எனும் பந்தத்தில் இணையத்தூண்டுகிறாள் தோழி.

இவ்வாறு இயற்கை வர்ணனையாக அமையும் கருப்பொருளில் இருந்து உய்த்துணரும் பொருளூடாக வேறேர் பொருளை புலப்படுத்தி நிற்பதே "இறைச்சி"

இவ்வாறு இறைச்சிப் பொருளூடாக சங்கத்தமிழை தரணி புகழச் செய்த புலவர்களை வாழ்த்தி அவர்பணி தொடர்வோம்.

திரு.சோ.செல்வம் (ஆசிரியர்)
N.Dip.In.Tech(tamil)
BA, Dip.In.Edu,
Dip.In.Counselling

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# அந்த முகமூடிகளும் ...சொந்த முகங்களும்....

அவர் கடந்த ஒரு வாரகாலமாக மிகுந்த கலவர நிலையிலேயே காணப் பட்டார்......... பல தடவைகள் சந்திக்க முயன்றும் வழக்கமாக சிரித்த முகபாவத்துடன் காணப்படும் அவரின் முகத்தில் ஒருவித பதட்டநிலை பரவியுள்ளதை அவதானித்ததால் என்னால் அவரை எதிர் கொள்ள முடியவில்லை...

ஒரு மாதத்தின் முன்பு நடந்த இடமாற்றம் தொடர்பான கூட்டத்தில் அவர் தெளிவாகக் கூறினார். " இது மேலிடம் சிரமப்பட்டு உருவாக்கிய திட்டம் " கடந்த இருபது வருடங்களாக நடைமுறைப்படுத்தாத நிலையில் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எம்மீது பொறுப்பளிக்கப்பட்டுள்ளது..... கவனம் எந்த வித பாரபட்சமும் இல்லாமல் தயாரிக்கப்படல் வேண்டும்....... என்ன சரி தானே...." "சேர் அடுத்த திங்களுள் ஈமெயில் பண்ணவேண்டும் என்று இன்று அறிவித்துள்ளார்கள்.....முடியுமா சேர்..." திட்டமிடல் என்றால் கஷ்டம் தான் என்ன செய்வது ... மற்ற ஒப்பீசர்களும் உதவுவார்கள்தானே...."

சுற்று நிருபத்திற்கேற்ப குடும்ப நிலைமை கஷ்டப்பிரதேச சேவை ... உடல் சுகவீனங்கள் கற்பிக்கும் பாடம் வாழ்விட விலாசம் போன்ற பல்வேறு தகவல்களை தொகுத்து.. கணணி படுத்துவதற்கிடையில் நாரி கடுப்பெடுத்து விடும்....... கண்கள் சலித்து விடும்..... அலுப்பெடுத்த இந்தத் தொழிலின் வேலைப் பழு என்னை அத்தொழிலை விட்டே ஓட வேண்டும் என்று எண்ணத் தோன்றும்...

ஆனாலும்....புதிய பணிப்பாளரின் நிர்வாகச் சாகசம்... சாதுரியம்.. என்னைச் சற்று ஆசுவாசப்படுத்தத்தான் செய்தது...... பெறும் சம்பளத்தை விட இரண்டு மடங்கு சுமைகள்......

இரவு பகலாக வேலைசெய்ய வேண்டும்...... மொபைலை ' ஓனிலேயே வைத்துக் கெள்ள வேண்டும் என வலியுறுத்தும் பணியாளர்கள் பலரை கண்டிருக்கிறேன்....

அவர்களுள் இவர் சற்று வித்தியாசமாகத் தான் தெரிந்தார்........

" தம்பி ... ஆகக்கூடியது அலுவலக நேரம் மட்டும் வேலை செய்தால் போதும்........ ஆனால் நேரத்தை துஷ்பிரயோகம் செய்வது சரியல்ல " என்று நாசூக்காக கூறுவார்.

இடமாற்றம் கோரி வருபவர்களின் குடும்ப நிலைமை........ அரசியல் பின்னணி ...... என்பவற்றை பூடகமாக அறிந்து அவர்களைக் " குளிர் வித்து" அடுத்த ஜனவரியிலாவது இடமாற்றம் தந்தால் போதும்" என்ற ஆறுதலுடன் செல்லும் பலரைக் கண்டிருக்கிறேன்.

எனினும்.....

இந்த இடமாற்ற நடைமுறை அவருக்குப் பலத்த சவாலாகத்தான் இருந்தது....

அவர் முகத்தில் களையேயில்லை......

மேலிடத்தினால் அனுப்பப்பட்ட இடமாற்ற சுற்றுநிருபத்தை ஒன்றுக்கு பத்துத் தடவை அலசி ஆராய்திருந்தோம். இத்திட்டத்தை பலத்த பரிசோதனைகளின் பின் சகல தொழிற்சங்க தலைமைகளும். ஏற்றுக் கொண்டிருந்தன..... அவர் எங்கள் குழுவினரை அழைத்து " நாம் மிக்க கவனமாக இப்பணியை நிறைவேற்ற வேண்டும் இது ஒரு சென்செற்றீவ் ஆன வேலை.... ஒரு தவறு நடந்தால் தொழிற்சங்கமோ.... ஆசிரியர்களோ எம்மைப் பியத்தெடுத்து விடுவார்கள் ஒவ்வொரு ஆசிரியர் மேலும் தனிபட்ட கவனம் எடுத்துக்கொள்ளுங்கள் ....... ஆறுதலாக நிதானமாக செய்து முடியுங்கோ...."

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டோம்....

ஆனால்..

அந்த திருப்தி ஒரு வாரம் கூட நீடிக்கவில்லை...... அவருக்கு மட்டுமல்ல ..... எங்களுக்கும் மனக் கிலேசத்தையும் மனச்சலிப்பையும் ஏற்படுத்தும் அந்த சம்பவம் அடுத்த வாரமே நடந்தது...

சென்ற திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு இடமாற்றச் சபையை அவர் கூட்டினார்....

கடந்த இருபது வருடங்களாக ஒரு முறையான இடமாற்றம் திட்டமுமில்லாமல் தனிபட்ட கோபதாபங்கள் .... விருப்பு வெறுப்புக்கள் .... அரசியல் தலையீடுகள் என்றெல்லாம் பல்வேறு ஜகதலப் பிரதாபங்கள் நடாத்தப்பட்டு ஏதோ ஒரு வகையில் இடமாற்றங்கள் நடைபெற்றன... அதிகஷ்டப் பிரதேசங்களில் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடமையாற்றியும் நிவாரணம் கிடைக்காமல் வெதும்பியவர்கள்

பஸ்ஸிலிருந்து இறங்கி காட்டு வழியே இரண்டு கிலோமீற்றர்களுக்கு நடந்தே சென்று துயரப்படுபவர்கள்.....

பஸ்ஸில் இருந்து இறங்கி ஆட்டோவில் ஐந்து கிலோமீற்றர் தூரம் பயணித்து நாளொன்றுக்கு இருநூறு ரூபாய்களை பிரயாணத்திற்கே செலவு செய்து ஓய்ந்தவர்கள்......

நகரத்தில் இருந்து தூரப் பாடசாலைகளுக்கு செல்லும் ஒரே காரணத்தாலேயே திருமண பந்தங்கள் பின்தள்ளப்பட்ட பாவப்பட்ட ஜென்மங்கள்......

இவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் அவரிடம் வந்து தினமும் தமது வேதனைகளை........ கஷ்டங்களை....... கொட்டித் தீர்த்து ஆறுதல் தேடுவர்...

அத்தனை பிரச்சனைகளுக்கும் புதிய சுற்றுநிருபம் நிவாரணமும்.... திருப்பமும் தரும் என்று அவர் திடமாக நம்பினார். இதற்கான வியூகங்களையும் வகுத்து வித்தியாசமாக சிந்தித்து........ ஓர் இடமாற்ற பட்டியலை எங்களின் உதவியுடன் தயாரித்தார்.

எங்களுக்கு மிகவும் சந்தோசமாகத்தான் இருந்தது........ பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்போதாவது ஓர் ஆறுதல் கிடைக்கட்டுமே. வழக்கமாகவே பணியாளர்களை விமர்சிப்பதை மட்டுமே தொழிலாகக் கொண்ட நூறுதீன் கண்களைச் சிமிட்டியபடியே கூறினார். "தம்பி.. பணிப்பாளர் நினைக்கிறார் தான் பெரிய வெற்றி பெற்றுவிட்டதாக... ஆனால் மிகப் பெரிய தோல்வியைச் சந்திக்க போகிறார்........ பாருங்கள்...... சேர் அப்படிச் சொல்லாதீங்கோ..... ஏதோ அப்பாவி ஆசிரியர்களுடைய நிலைமை இப்படியாவது மாறட்டுமே...." என்றார் சிவனேசன் சேர்.

"அவருக்குத் தோல்வி ஏற்பட்டால் அது எமக்கும் தானே சேர்... நாங்கள் எமது கல்விப் புலத்தின் முன்னோடிகள்.... பொறுப்புள்ளவர்கள்.. வகைகூறக்கடமைப்பட்டவர்கள்....எல்லோரும் சேர்ந்து செய்வதை வெற்றி பெற்றால் அக்களிப்பதும் தோல்வி ஏற்பட்டால் தனிப்பட்ட ஒருவரை காரணப்படுத்துவதும் பொருத்தமானதாகப்படவில்லை......"

சற்று காட்டமாகத் தான் கூறிவிட்டேன் . அன்று மூன்று மணிக்கு சபை கூடிய போது எம்மால் தயாரிக்கப்பட்ட இடமாற்றப் பட்டியலை அனைவருக்கும் வழங்கினேன். ஆரம்பத்தில் பணிப்பாளர் பொதுவாக சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களையும்.... நிபந்தனைகளையும்..... நாங்கள் இப்பட்டியலை தயாரிப்பதில் எதிர்நோக்கிய இடர்பாடுகளையும் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டிய தேவைகளையும் பற்றி விளக்கினார்.

ஒரு சினேகபூர்வமான உரையாடலாக வழி நடத்தி " தமது பட்டியலை அனைவரும் ஏற்றால் சிறப்பாக இருக்கும் " எனக் கனிவாக எடுத்துக் கூறினார்.

முதலில் அந்தோனி முத்துத்தான் எகிறிவிழுந்தார் " இதென்ன இடமாற்றம்..." எல்லாமே பிழை எல்லாவற்றையும் திருத்த வேண்டம் என்னால் சம்மதிக்க முடியாது" அஷ்ட கோணமாக முகத்தை மாற்றி எரிந்து விழுந்து இரைந்து பேசத் தொடங்கினார்.....

தம் பங்கிற்கு புவிராசாவும் ஒருபடி மேலே போய் " இந்த சுற்றுநிருபமே பிழை எங்களை கலந்தாலோசிக்காமல் தயாரிக்கப்பட்டது..... நான் முற்றாக நிராகரிக்கிறேன்.."

பணிப்பாளரின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.... ஒருமாத இடைவிடாத உழைப்பு.....

உடல் களைப்பு....

சோர்வு... அத்தனையும் வீணாகப் போய் விட்டதே!

கண்ணா..... அந்த மைலோவைக் கொடுங்கோ....... எனக்கு பசிக்குது.... சரி சரி பொறுங்கோ.... நிதானமாக யோசியுங்கோ.... எடுத்தெறிந்து பேச வேண்டாம்... மிகுந்த கஷ்டப்பட்டுத்தான் தயாரித்துள்ளோம்.... ஏதும் அநீதி இழைக்கப்பட்டிருந்தால். சொல்லுங்கள் திருத்துவோம்."

நிலைமையை சற்று ஆற்றுபடுத்த முனைந்தார். முகைதீன் மட்டும் சற்று நிதானித்துக் கூறினார்.

சரி சரி பணிப்பாளர் தயாரித்த லிஸ்டில் பிழையிருந்தால் நாம் திருத்துவோம் திருத்தி லிஸ்ட்டை ஏற்றுக்கொள்ளலாம் தானே? இது வரை பொறுமையாக இருந்த நவநீதன் கர்ண கடூரமான குரலில் உரத்துக் கூறினார்..... கொக்கரித்தார் என்றுதான் சொல்லலாம்.

" அதை நாங்களே திரும்பத் தயாரிக்க வேண்டும்.... அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது..... சுற்றுநிருபத்தை ஒரு பக்கம் வைத்து விட்டு நாம் ஒரு முடிவை எடுப்போம்..... என்ன சரிதானே.... ஒவ்வொன்றாகப் பார்போம்..."

பணிப்பாளர் முகத்தில் ஈயாடவில்லை......

"தம்பி பொறுங்கோ... இடமாற்றத்தை தயாரிப்பது உங்கள் வேலையில்லை...... ஏதும் பிழையிருந்தால் மட்டும் சுட்டிக்காட்டுங்கோ...திருத்துவோம்... காரணத்தையும் சொல்ல வேண்டும்..."

முகைதீன் மீண்டும் " நாங்கள் திருத்திக் கொடுப்போம் ..... எடுங்கள்"

உருவான சூழ்நிலையின் தாக்கத்தைத் தணிப்பதற்கு "தம்பி... கண்ணா.... அனைவருக்கும் கொடுத்து வாங்கி வாரும்...... இன்றே முடிக்க வேண்டும் " என்றார் பணிப்பாளர்.

பணி ஆரம்பமாகியது....

பணிப்பாளருடன் தனியாக நாங்கள் கலந்துரையாடினோம். தாள முடியாமல்.... தாங்க முடியாமல் வாய்விட்டுக் கூறினேன்.

" இவர்களில் யாராவது ஒருவர் ஒழுங்காகப் படிப்பித்தவரா...... ஒழுங்காக நோட்ஸ் ஒப் லெசன் கூட எழுதுபவர்களா... சங்கங்களின் தலைவர்கள் எவ்வளவு சிறப்பாக தீர்க்கமான நல்ல தீர்மானங்களை மேற்கொண்டு ஒத்துளைக்கும் போது இவர்கள் மட்டும் ஏன் இப்படி...? "

" தம்பி அவர்கள் அப்படி என்றால் நீங்களுமா.... சற்றுப் பொறுங்கோ... இந்தச் சூடு தொடரப் போவதில்லை.... பொறுத்திருந்த பாருங்கோ..." இரவு சுமார் பதினொருமணிக்குத்தமது கைங்காரியங்களை நிறைவேற்றி ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்....அப்பாடா..... இப்படியாவது ஒரு முடிவுக்கு வந்தனரே......

ஹ்ம்.... நீண்ட பெருமூச்சை விட்டுக்கொண்டேன். மாற்றப்பட்ட பட்டியலின் பிரதிகளைப் பணிப்பாளரிடம் வழங்கிவிட்டு " சேர் இது தான் பைனல் லிஸ்ட் அடுத்த வாரம் வருகிறோம்.... தயாரித்து வையுங்கள்....." நான் அவர்கள் திருத்தியதை அவதானித்தேன் ....ஏறக்குறைய முற்றிலும் மாற்றப் பட்டிருந்தது...விக்கித்துப்போனேன்.... அதிர்ச்சியில் உறைந்தும் விட்டேன்.

இருபது வருடங்களாக நடந்த பிழை தொடர்ந்தும் தொடரத்தான் போகிறதா.... இந்த சுற்றுநிருபம்...... உழைப்பு..... நியாயம்.......... எல்லாம் வீண் தானா....? நெஞ்சில் கனன்று கொண்டிருந்த ஆதங்கத்தின் சூடு என்னை மேலும் வாட்டியது. அவர் அதைபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. " சேர் புதிய லிஸ்டைத் தயாரித்து நான் நாளை தருகிறேன்...."

" வேண்டாம்......... நானே பார்த்துக் கொள்கிறேன்......... என்னிடம் தாருங்கள் " என்று பட்டியல் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டார். நான் தொடர்ந்தும் குழம்பிப் போய் நின்றேன். சரணாகதி அடைந்து விட்டாரா......

சுற்றுநிருபம்..... நிபந்தனைகள்...... எல்லாம் அம்போ தானா? அந்த வாரம் முழுவதும் எனக்கு நித்திரையே வரவில்லை மறு நாள் அலுவலகத்திற்கு வந்து அவரின் அறையை எட்டிப்பார்த்தேன்.

கதிரை காலியாக இருந்தது. இன்னும் முடிவுக்கு வரவில்லையோ....

இன்ரகோமில் அடிக்கடி அழைத்து அவரின் வரவை அறிய முயன்றேன்.... சற்று நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து தன் கடமையை கிரமமாக மேற்கொண்டிருந்தார்... எவ்வித குழப்பமும் இல்லாமல் சந்திக்க வந்த அனைவரிடமும் " இன்ஸா அல்லாஹ்.... பார்போம்.... செய்வோம்..'' என்று கூறிக்கொண்டிருந்தார். அடுத்த வாரமும் மிக விரைவாக வந்து விட்டது.....

இடமாற்ற சபைக்கு அனைவரும் பிரசன்னமாகியிருந்தனர். மூன்று மணியாகி விட்டது..... எங்கள் மனதின் பதட்டம் கூடிக்கொண்டிருந்தது......

என்ன நடக்குமோ முடிவு வருமா..... சென்ற வாரம் போல இன்றைக்கும் சூடுதானா...? அவர் சரியாக மூன்றரைக்குச் சமூகமளித்தார். இதழிக்கிடையில் மெல்லிய புன்னகையை பரவவிட்டிருந்தார். தான் கொண்டு வந்திருந்த புதிய லிஸ்ட்டை அவர்களிடம் கையளித்தார்.

ஒரு வாரம் முழுவதும் மிகுந் சிரமப்பட்டுத்தான் பட்டியலை தயாரித்திருப்பார் போலும் நால்வரும் புதிய லிஸ்ட்டை மிகவும் கவனமாகவும் அவதானமாகவும் ஆராய்ந்தனர்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து புன்னகைத்தனர்...

அவர்களின் முகத்தில் ஒரு திருப்தி இழையோடியது.

பணிப்பாளர் முகத்தை ஊடுருவினேன்.... அவர் சலனமற்றே இருந்தார்....

இறுதிப்பட்டியலில் கடைசியில் தம் பெயரை எழுத்தி கையொப்பத்தையும் இட்டார். அதில் பட்டியல் எங்களால் சரிபார்க்கப்பட்டு சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டதை சரியென உறுதிப்படுத்தி ஏற்றுக்கொள்கிறோம். என எழுதிருந்தது.

சரி சேர்...... நாங்கள் வருகிறோம் .... தாங்க்யூ சேர்..."

அவர்கள் விடைபெற்றனர்.

அவர் மர்ம புன்னகையுடன் புதிய பட்டியலை என்னிடம் தந்தார்.

புதிய பட்டியலை ஆராய்ந்தோம்......

எல்லாமே மாற்றப்பட்டு விட்டதா.......

இல்லையே.......

கூர்ந்து அவதானித்தோம்!

வியப்பின் எல்லையில் புருவங்களை உயர்த்தி '' வாவ்வ்வ் '' நீங்க சாதிச்சிட்டீங்க சேர்..." என்றோம்

அதே புன்னகையுடன் " தம்பி நீங்களும் கையொப்பமிடுங்கோ இடமாற்றப் பட்டியல் ஓகே தானே.....? "

அவர் நகர்ந்து விட்டார்.

ஆரம்ப லிஸ்ட்டில் நான்கு திருத்தங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்தோனி முத்துவின் மனைவிக்காக பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்றம் வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலையாக மாற்றப்பட்டிருந்தது.

முகைதீனுக்கும் புவிசாருக்கும் வழங்கப்பட்டிருந்த இடமாற்றம் இரத்து செய்யப்பட்டிருந்தது.

நவநீதனின் பரம எதிரிக்கு நகருக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்றம் புற நகருக்கு வேறுபடுத்தப்பட்டிருந்தது......

என் மன ஓட்டத்திலும் சிந்தனையிலும் இருந்த இறுக்கம்....., பதட்டம் மாறி ஏற் புதிய சூழ்நிலையின் சுகந்தம் மனது இதமாக..... ஆறுதலாக இருந்தது....

- யாவும் கற்பனையே -

**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலியை மேயும் பயிர்கள்

வேலிகள் காணமற்
போகின்றன.

முட்கம்பிகளும்
தூண்களும்
கட்டைகளும்
கிளுவைகளும்
நெருஞ்சிகளும்
வேலியிலிருந்த
காகங்களும்
ஓணான்களும் கூட
காணாமற் போகின்றன

இப்போ தெல்லாம்
பயிர்களை எவையும்
மேய்வதில்லை

அறுவடைக்கும்
ஆயத்தமில்லை
பயிர்கள் கொழுக்கின்றன
அனைத்தையும் தின்றும்
பசி அடங்குவதாயில்லை

வேலிகளுக்கும் காவலில்லை

பயிர்கள்
வேலிகளை மேய்கின்றன
வேலிகள்
காணாமற் போகின்றன.

-பத்மபிரசன்-

## -நீ உருக வழியும் நான் -



உன்
புன்னகையும்
பார்வையின்
ஸ்பரிசமும்

ஆயிரம்
வார்த்தைகளுக்கு
ஒப்பானது

ஒரு நிமிடம் கூட
உன்னை
ஒதுக்கி வைக்க
முடியவில்லை

அத்தனைக்கத்தனை
நீ என்னை
வியாபித்துக் கொண்டது.....
- உண்மை

உன்னை எண்ணும் போது
மனசுக்குள்
சாரலடிக்கின்றது.

கல்யாணியும் மோகனமும்
ஜலதரங்கம் வாசிக்கின்றன.

ஜெ.மதிவதனி

# கவி முரசு

## -பெருமை கொள் பெண் இனமே-

உலகத்தில் மேன்மையானவள் - நீ
மெய்யன்புடன் வாழ்பவளும் நீ
காலம் இல்லையென சொன்னாலும்
பாரினில் உயர்வானவள் நீ

கள்ளிப் பாலைத் தாண்டி
பள்ளி படிப்பினில் வென்று
வெள்ளித் தங்கமாய் என்றும்
அள்ளி வென்றிட வந்தவள் நீ

பட்டம் பெற்றாய்
சட்டமும் உருவாக்கினாய்
வட்டம் ஏனடி இன்றும்
திட்டம் இனிதே கொள்!

அன்பு உன் கண்களில்
அறிவு என்றும் உன் நெஞ்சில்
நம்பு இனியும் சாதிக்கலாம்
நானிலம் போற்ற வாழ்ந்திடலாம்

ஜெ.ஜெயகௌரி
பாலையூற்று

## காதல் நிவந்தம்



உன்
வசீகரத்
தோற்றம்...
கள்ளங்
கபடமற்ற
பேச்சு...
பேச்சில்
அசையும்
அவ்
உதடுகள்...
மயக்கும் இரு கரு விழிகள்
அட்டகாசமான
கம்பீர நடை ....
இதமான தொடுதல்கள்....
வார்த்தைகளால்
சுகமான வருடல்கள் .... மோதல்கள்
இவற்றுடன் பிணைந்துள்ள உன்
ஆன்மாவின் சந்தம்....
இவையனைத்தும் எனக்கு மட்டுமே
தரவேண்டும்!!!,
எனக் கேட்கமாட்டேன்

உன் அன்புச் சித்திரவதையை
மட்டும்
உன் அடிமைக்குத் தருவாயா?....

பொனி..

## இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வில் தம்பலகாமம் - பாகம் 2 -

வெவ்வேறு வகையான உருவங்களைக் கொண்ட ஊர்ப் பெயர்களில் மனித இனத்தின் அனுபவம் பொதிந்துள்ளது. எனவே இடப்பெயர்கள் எல்லாம் மனிதனின் மொழிமரபையும் பண்பாட்டையும் வளர்க்கின்றன. இதனடிப்படையில் ஊர்களை இனங்காணுவது மனித இனத்தின் முக்கிய நடத்தையை உருவாக்குகின்றது. (2) என்று சொல்கிறார் திரு.ஆர். ஆளவந்தார்.

இலங்கைத் தமிழர் இடபெயர் பற்றிய ஆய்வில் அப்பெயர்கள் தமிழகத்து இடப்பெயர்க் கூறுகளுடன் ஒப்பிடக்கூடியதாகவும், அதேவேளை சில இடப்பெயர்கள் இலங்கைத் தமிழர் இலங்கைத் தமிழர் வரலாற்றில் தமக்கென தனியான இடத்தினைக் தனித்துவத்தை அடையாளப் படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் தமிழ் மொழி பெருங்கற்படைக்காலத்தில் வழக்கில் இருந்தமைக்கு சான்று பகிரும் பிராமிச் சாசனங்கள் இந்தியாவிலுள்ள பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் காணப்படாத தமிழ் மொழிக் கலப்புடன் காணப்படுவதை இங்கு குறிப்பிடலாம்.(1)

இலங்கையில் "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடபெயர்களை ஆராய்கையில் அவை வரலாற்றுக்காலம் முதல் தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் முழுவதும் பரவி இருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது.

மாவட்ட ரீதியில் அவ்விடப் பெயர்கள் வருமாறு.

யாழ்ப்பாண மாவட்டம் - கொடிகாமம், தம்பகாமம், வலிகாமம், வீமன்காமம்
முல்லைத்தீவு மாவட்டம் - பனங்காமம்
அம்பாறை மாவட்டம் - இறக்காமம் (ஏறுகமம் )
மட்டக்களப்பு மாவட்டம் - பழுகாமம்
மொனராகலை மாவட்டம் - கதிர்காமம்
பொலநறுவை மாவட்டம் - சந்தணகாமம் (இன்றைய கல்லோயா)
திருகோணமலை மாவட்டம் - தம்பலகாமம், உரகிரிகாமம், கிரிகண்டகாமம், மேன்காமம்
மன்னார் மாவட்டம் - வலிக்காமம், முதலியான்காமம்
அனுராதபுரம் மாவட்டம் - அனுராதகாமம் (பழைய பெயர்),கணகாமம்

மேற்கூறிய இடப்பெயர்கள் கொண்டதாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தேவநம்பிய தீசன் (கி.மு 247 - 207 ) அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தல் மகாவலிகங்கைப் பிரதேசத்தில் 32 தமிழ்ச் சிற்றரசுகள் ஆண்டு கொண்டிருந்ததாக மகாவம்சம் (XIX.54) சொல்கிறது. இப்பிரதேசங்களில் கதிர் காமம் மற்றும் சந்தணகாமத்தைச் சேர்ந்த தமிழ் சிற்றரசர்கள் தேவநம்பியதீசனின் அழைப்பினை ஏற்று புனித அரசமரக்கிளை நாட்டும் விழாவில் கலந்துகொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.(3)

கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்து வந்த விஜயனின் மந்திரிகளில் ஒருவரான அனுராதரினால் இலங்கையில் முறைப்படி அமைக்கப்பட்ட முதல் குடியிருப்புப் பகுதியே அனுராதகாமம்.

இதுவே பிற்காலத்தில் அனுராதபுர நகரமாக மாற்றிய மைக்கப்பட்டது. அத்தோடு கி.மு 5ம் நூற்றாண்டில் இருந்து கி.பி 4 ம் நூற்றாண்டுவரையான காலப்பகுதியில் அனுராதபுர அரசிற்கு அருகில் இருந்த பல பிராந்திய சிற்றரசுகளில் கணகாமமும் ஒன்றாகும். கணகாமம் என்பது ஒரு வணிககக்குடியிருப்பு ,அங்கு வணிககக்குழுக்களுக்குரிய தலைவனின் நிர்வாகம் இருந்ததை மிகிந்தலை பிராமிக் கல்வேட்டு உறுதிப்படுத்துகிறது.(4)

இன்று ஐந்து நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட பிரதேசமாக உள்ள வலிகாமம் என்பது ஒரு கிராமத்தின் பெயராக இருந்து பின்னர் பிரதேசத்தைக் குறிக்கும் சொல்லாக மாறியது என்பர்.

யாழ்ப்பாண வைபவமாலை, வையா பாடல்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு மணற்றி, மணற்றிடர் என்ற தூய தமிழ்ப் பெயர்கள் முன்னர் வழங்கியமை அறியப்படுகின்றது.

மதுரை மன்னன் வரகுண பாண்டியன் இந்த "மணற்றியை" வென்ற செய்தியை "மன்னோரழிய மணற்றி வென்றான்" என்ற பாடல் கூறுவதாய் அமைந்தள்ளது.

சங்கத் தமிழில் வால் எக்கர் என்பது வெள்ளை மணல் திட்டுகள் அல்லது வெள்ளை மணல் தொடர்களை அழைக்கப்பயன்படுத்தப்பட்ட சொல் ஆகும். சிலப்பதிகாரத்தில் வரும் வாலுகம் வெள்ளை மணலை குறிக்கும். எனவே மணற்றி, மணற்றிடர் - மணலூர் வலிகாமம் ( வலிகாமம் ஸ்ரீ மணல் கிராமம்) என்பன ஒரேயிடத்தைச் சுட்டும் தமிழ்ப் பெயர்கள் என்பது புலனாகின்றது.

"வீமன்" என்ற கூத்துக் கலைஞன் அல்லது வீமன் என்ற தலைமகன் ஒருவன் விரும்பி வந்து தங்கி வாழ்ந்த இடமே "வீமன்காமம்" என்று கருதப்படுகிறது. இதனருகில் "கூத்திவளவு" என்ற இடம் இருப்பது பண்டை நாட்களில் இங்கு பாரதக்கதையோடு தொடர்புடைய கூத்துக்கள் ஆடப்பட்டமை தொடர்பானது என்பது சிலர் கருத்தாகும். (5)

பனங்காமம் பற்று வன்னிபமாகிய நல்ல மாப்பாணன் வழங்கிய ஒலை அடங்காப்பற்றிலே அதிகாரஞ் செலுத்திய வன்னியரின் ஆவணங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிது.(6)

அதே போல்05.06.1893 ஆந்திகதியிடப்பட்ட உயில் கொட்டியாரப்பற்று மேன்காமத் திலிருந்த இருமரபுத் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னியம் தம்பலகாமம் ஆதிகோண நாயகர் கோயில் தொழும்பாளர்களுக்கு இடையே ஏற்பட்ட வாரிசுரிமை தொடர்பான பிரச்சனை ஒன்றைத் தீர்த்து வைத்ததைச் சொல்கிறது.

கி.பி 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் நிலாவெளி தான சாசனம் உரகிரிகாமம், கிரிகண்டகாமம் என்னும் நிலாவெளிக்குள் அடங்கிய தற்போது வழக்கொழிந்துபோன இரு இடப் பெயர்களை அடையாளப் படுத்துகிறது. பழுகாமம் வன்னிபம்பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், நாட்டார் பாடல், ஐரோப்பியர் எழுதிய ஆவணங்கள் என்பவற்றின் மூலமாக அறிய முடிகின்றது. இவர்கள் சுதந்திர அரசாக இருந்ததோடு சில காலங்களில் கண்டி மன்னனின் மேலாதிக்கத்துக்கும் உட்பட் டிருந்தார்கள் என அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் இலங்கையில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் முழுவதும் பரவி இருந்ததைக் காணக்கூடியதா இருக்கிறது. எனினும் காமம் கிராமம் என்ற இலங்கைத் தமிழர் இடப்பெயர் சொல் சமக்கிருத "(ப)கிராம" என்ற சொல்லிலிருந்து உருவானது என்ற வாதம் பன்னெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சமக்கிருத காமா என்பதே சிங்களத்திலும்(கம,கமுவ) ,பாலி போன்ற பரகத மொழிகளிலும் பொதுவான வேர் கொண்ட சொல்லாகத் திகழ்கின்றது என்பது இதற்கு வலுச்சேற்கும் கருத்தாகக் கொள்ளப்படுகிறது.

ஆனால் மொழியியல் அறிஞர்கள் காமம் என்ற திராவிடச்சொல் தமிழில் இருந்து வடசொல் ஆனது என்பர். "கமம்" நிறைந்து இயலும்" என்றார் தொல்காப்பியர் (தொல். சொல். உரி. 355)

கமம் என்ற சொல்லுக்கு பொருள் நிறைவு என்பதாகும் . கமம் என்ற சொல்லே காமம் என்றானது. சங்கத் தொடரில் வரும் " கமஞ் சூல் மாமழை " என்பதற்கு சூல்நிறைந்த முகில் என்பதே பொருள். அதோடு அன்பின் நிறைவையே காமம் என்று பழந்தமிழர்கள் அழைத்தனர். காமம் மிக்க கழிபடர் கிளவி என்று தூது இலக்கியம் அதைத்தான் சொல்கிறது.

நிறைவு எனப் பொருள்பட்ட இந்தக் கமம், மக்கள் நெருங்கி வாழும் ( உறு - ஊர் போல் ) இடத்தினைக் குறிக்க பொருள் விரிவு பெற்று காமம் ஆனது என்பர். கமம் என்றசொல் பயிர்செய்கை நிலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

எனவே இலங்கையில் தமிழர் வாழ்ந்துவரும் பிரதேசங்களில் வழக்கில் இருக்கும் "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் ஊர் என்ற பொருள்படவே அமைந்திருக்கிறது எனலாம்.

**-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-**


1. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.
2. ஆளவந்தான், ஆர், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் ,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
3. இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும் திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் 2001.
4. இலங்கை வரலாறு பேராசிரியர்.சே. கிருஸ்ணராசா 2005
5. இடப்பெயர் ஆய்வு கலாநிதி இ. பாலசுந்தரம் 1988
6. வன்னியர் கலாநிதி சி. பத்மநாதன் 1970


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய்யை வைத்து மீண்டும் படம் இயக்குவேன்': பிரபுதேவா



நடன இயக்குனராக தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகி, நடிகராக அவதாரமெடுத்து, பின் 'போக்கிரி', 'வில்லு', 'எங்கேயும் காதல்' ஆகிய படங்களை இயக்கியவர் பிரபுதேவா. இந்தியிலும் சில படங்களை இயக்கியுள்ளார். தற்போது இந்தி சினிமாவில் பிசியாக இருக்கும் பிரபுதேவா சென்னையில் அளித்த பேட்டி வருமாறு:– தங்கர்பச்சானின் 'களவாடிய பொழுதுகள்' படத்தில் நடிக்கிறேன். நல்ல கதை. இப்படத்தில் எனது கேரக்டர் வித்தியாசமாக இருக்கும். நான் மும்பைக்கு குடிபெயர்ந்துள்ளதாக சொல்லப்படுகிறது. அது உண்மையல்ல. எனது சினிமா படவேலைகள் மும்பையில் இருப்பதால் அதிக நாட்கள் அங்கு இருக்கிறேன். ஆனாலும் சென்னைதான் என் வீடு. என் இரு மகன்கள் சென்னையில் உள்ளனர். இருவரும் அவர்களின் தாயுடன் வசிக்கிறார்கள்.

எனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சென்னை வந்து குழந்தைகளை பார்க்கிறேன். அவர்களுக்கும் நேரம் கிடைக்கும் போது மும்பை வருகிறார்கள். விஜய்யை வைத்து மீண்டும் படம் எடுக்க விருப்பம் உள்ளது. அதற்கான வாய்ப்புகள் அமையும் போது படம் எடுப்பேன்.

## ஒரே நாளில் ரிலீஸ்: விஷால், கார்த்தி படங்கள் போட்டி

விஷாலின் 'மதகஜராஜா' படமும் கார்த்தியின் 'பிரியாணி' படமும் அடுத்த மாதம் (செப்டம்பர்) 6–ம் திகதி ஒரே நாளில் திரைக்கு வருகின்றது. இவ்விரு படங்களும் போட்டியிடும் அதே நாளில் சிவகார்த்திகேயன் நடிக்கும் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படமும் வருகிறது. மதகஜராஜா படத்தில் விஷால்க்கு ஜோடியாக அஞ்சலி, வரலட்சுமி நடித்துள்ளனர். இத் திரைப்படத்தை சுந்தர்.சி இயக்கியுள்ளார்.

இந்த படம் முன்பே திரைக்கு வெளி வர இருந்தது. ஆனால் படத்தின் தயாரிப்பாளர் மரணம் அடைந்ததால் சிக்கல் ஏற்பட்டது. தற்போது பிரச்சினைகள் முடிந்து திரைக்கு வருகிறது. பிரியாணி படத்தில் கார்த்தி ஜோடியாக ஹன்சிகா நடித்துள்ளார். வெங்கட் பிரபு இயக்கியுள்ளார். பிரேம்ஜி அமரன், ராம்கி, நிதின்சத்யா, மதுமிதா போன்றோரும் உள்ளனர். காமெடி ஆக்ஷன் படமாக தயாராகியுள்ளது.

## மீண்டும் ஜோடி சேர்கிறார்கள் சுவாதி, ஜெய்



சுப்பிரமணியபுரம் புகழ் நடிகை சுவாதியுடன் மீண்டும் ரொமான்ஸில் ஜோடி சேரப்போகிறார் ஜெய். தயாநிதி அழகிரி தயாரிப்பில் உருவாக இருக்கும் பெயரிப்படாத திரைப்படத்தில் ஜெய்யும், சுவாதியும் நடிக்கவுள்ளனர்.

இந்த படத்திற்கு இசையமைப்பவர் கொலைவெறி புகழ் அனி'ருத். ஏற்கனவே சுப்பிரமணியபுரம் படத்தில் இவர்கள் இருவரும் இணைந்து நடித்துள்ளனர். அப்படத்தில் இவர்களிடையே ரொமான்ஸ் நன்றாக ஒத்துப்போனதால் மீண்டும் ஜோடிசேர்கிறார்கள்.

தற்போது ஜெய் திருமணம் என்னும் நிக்காஹ் படத்தில் நஸ்ரியாவுடன் நடித்து வருகிறார். சுவாதியும் இதற்குத்தான் ஆசைப்பட்டாய் பாலகுமாரா என்ற படத்தில் பிஸியாக உள்ளார். இவர்களது இந்த புதிய திரைப்படத்திற்கான படப்பிடிப்பு இந்த மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## நஸ்ரியாவிற்க்கு தமிழில் குவியும் தொடர்ச்சியான வாய்ப்புக்கள்

தமிழில் நேரம் படத்தின் மூலம் அறிமுகமான நடிகை நஸ்ரியாவுக்கு தொடர்ச்சியாக பட வாய்ப்புக்கள் தேடி வருகின்றனவாம். நடிகை நஸ்ரியா ஜெய்க்கு ஜோடியாக திருமணம் என்னும் நிக்கா மற்றும் தனுசுடன் நய்யாண்டி என அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறார்.

முன்பு படங்களில் மட்டுமே கவனத்தை செலுத்தி வந்த ஹன்சிகாவுக்கு தற்போது சிம்புவை காதலிக்கும் பொறுப்பும் சேர்ந்து கொண்டதால் குறிப்பிட்ட சில படங்களை மட்டுமே ஒப்பந்தம் செய்கிறாராம்.

இதனால் அவர் வேண்டாம் என்று திருப்பிவிடும் படங்கள் எல்லாம் நஸ்ரியாவை தேடிப்போகிறது. நஸ்ரியாவும் எந்த மறுப்பும் சொல்லாமல் அட்வான்ஸ் பணத்தை வாங்கிக் குவித்து வருகிறார்.

ஏற்கெனவே நயன்தாரா மறுக்கும் படங்களும் நஸ்ரியாவைத் தேடி வந்தது குறிப்பிடத்தக்கது.

## ரெடியானது கோச்சடையான் டிரைலர்



சௌந்தர்யா இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள கோச்சடையான் திரைப்படத்தின் டிரெய்லர் ரெடியாகியுள்ளது. கோச்சடையான் எப்போது ரிலீஸாகும் என்பது தான் ரஜினி ரசிகர்களின் கேள்வியாக இருக்கிறது. படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. டிரெய்லர் கூட தயாராகிவிட்டதாம். அவதார் படம் போலவே இந்தப் படத்திலும் விஷுவல் எபக்ட் பயங்கரமாக இருக்கும் என்கிறார்கள். அதற்காகத்தான் இவ்வளவு நாட்கள் தேவைப்பட்டதாம்.படத்தின் பின்னணி இசையை லண்டனில் உள்ள ஸ்டுடியோவில் முடித்துவிட்டாராம் ஏ.ஆர்.ரஹ்மான். தமிழ், ஆங்கிலம் உள்பட பல்வேறு மொழிகளிலும் படத்தை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஒருவேளை ரஜினியின் பிறந்தநாளுக்கு கோச்சடையான் வெளிவரலாம் என்று ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை என இயக்குனர் சௌந்தர்யா தெரிவித்துள்ளார்.

# சினிமுரசு

## உலகத்தின் ஒரே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தான்



-தமன்னா-

உலகில் ஒரே ஒரு சூப்பர் ஸ்டார் ரஜினி சார் மட்டுமே என்று பாலிவுட் கிங் ஷாருக்கான் கூறியுள்ளார். ஷாருக்கான் - தீபிகா படுகோன் நடிப்பில் திரைக்கு வரவிருக்கிறது சென்னை எக்ஸ்பிரஸ் படம். இந்தப் படத்துக்கான அனைத்து விழாக்களும் சென்னையில் நடப்பது போலவே ஏற்பாடு செய்துள்ளார் ஷாருக்கான்.

இதில் கலந்துகொள்வதற்காக படத்தின் நாயகி தீபிகா படுகோனுடன் சென்னை வந்த ஷாருக்கான் விழாவில் ஊடகத்தினரை சந்தித்து பேசுகையில், என் அம்மா பிறந்த ஊர் ஹைதராபாத். தீபிகாவுக்கு சொந்த ஊர் பெங்களூர். இந்தப் படத்தில் நடித்துள்ள நடிகர் சத்யராஜ் தமிழ்.மொத்தத்தில் இந்தப்படம் சம்பந்தப்பட்டவர்கள் தென் இந்தியர்கள். தென் இந்தியர்கள் எல்லோரும் இணைந்து ஒரு இந்தி சினிமா செய்திருக்கிறோம் என்றார்.

மேலும் உலகத்திற்கு ஒரே ஒரு சூப்பர் ஸ்டார்தான். அவர் ரஜினி சார்தான். இது எல்லோருக்கும் தெரியும். ரஜினி சாருக்கு ஜப்பானில் இருக்கும் ரசிகர்களை கண்டு நான் வியந்திருக்கிறேன். தனித்துவம் வாய்ந்த அந்த மனிதரை கொண்டாடுவதற்கு ஒரு வாய்ப்பு அமைந்தது. அதனால்தான் லுங்கி டான்ஸ் (நடனம்) ஒன்றுக்கு ஆடியுள்ளேன். இந்த பாடல் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த பாடலுக்கும் படத்திற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் ரஜினி சாருக்கு என்னால் முடிந்த ஒன்றைச் செய்த திருப்தி இருக்கிறது என்று கூறியுள்ளார்.

## 16 மொழிகளில் மொழிமாற்றம் ஆகிறது சில்க் சிமிதாவின் திரைப்படம்

சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை இந்தியில் 'டேர்ட்டி பிக்சர்' என்ற பெயரில் திரைப்படமாக்கி இருந்தனர். வித்யா பாலன் நடித்திருந்த இந்தப் படம் ஹிட்டானது. இதையடுத்து சில்க்கின் வாழ்க்கையை 'கிளைமாக்ஸ்' என்ற பெயரில் மலையாளத்தில் எடுத்தனர். இது தமிழில், 'ஒரு நடிகையின் டைரி' என்ற பெயரில் வெளியானது.

இதையடுத்து கன்னடத்தில், 'சில்க்: சக்கத் மகா' என்ற பெயரில் அவர் வாழ்க்கையை படமாக எடுத்துள்ளனர். இதில் பாகிஸ்தான் நடிகை வீணா மாலிக், சில்க் வேடத்தில் நடித்துள்ளார். திரிசூல் இயக்கியுள்ள இந்தப் படத்தை 16 மொழிகளில் மொழிமாற்றம் செய்து வெளியிட உள்ளனர்.

## இலங்கை பிரச்சனையை சித்தரிக்கும் மெட்ராஸ் கபே



இலங்கைப் பிரச்சனையை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படம் மெட்ராஸ் கபே.இதில் இந்தி நடிகர் ஜான் ஆபிரகாம் நடித்துள்ளார். இப்படம் தமிழிலும் வெளிவர உள்ளது. இந்த திரைப்படத்தின் கதை இலங்கை சம்மந்தப்பட்டது என்பதால் அங்கு படப்பிடிப்பு நடைபெற்றது. ஈழத்தமிழர்களை தவறான விதத்தில் சித்தரித்திருப்பதாக கூறி, தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சிலர் இப்படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேலும் திரைப்படம் வெளியாவதற்கு முன்பு தங்களுக்கு திரையிட்டு காட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். இந்நிலையில் சென்னையில் ஊடகத்தினரைச் சந்தித்து பேசிய நடிகர் ஜான் ஆபிரகாம் இந்தப் படத்தில் யாரைப் பற்றியும் குறை சொல்லவில்லை.

நீண்ட ஆய்வுக்குப் பிறகு இந்தப் படத்தின் கதையை படமாக்கியுள்ளோம். யாருடைய மனமும் புண்படும் விதமாக இந்தப் படம் அமையாது. இலங்கையில் நடந்த விடயங்களை காண்பித்திருக்கிறோமே தவிர அதை ஆதரிப்பதாகவோ, எதிர்ப்பதாகவோ படத்தில் எந்த கருத்தையும் நாங்கள் சொல்லவில்லை என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் கீயின் குறுக்கு வழி பயன்பாடுகள்

விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில், அதன் சின்னத்துடன் ஒரு கீ, தட்டச்சில் தரப்பட்டிருக்கும். இதனைத் தனியாகவும், மற்ற கீகளுடனும் இயக்கி சில செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். கீழே அந்த குறுக்கு வழி (ஷார்ட்கட்) கீகளும் அவற்றிற்கான செயல்பாடுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை நீங்கள் அடிக்கடி மேற்கொள்ளும் சூழ்நிலைகளும் உங்கள் செயல்பாட்டில் இருக்கலாம். எனவே கவனத்துடன் இவற்றை நினைவில் கொண்டு பயன்படுத்துங்கள்.

விண்டோஸ் லோகோ கீ தனியாக – ஸ்டார்ட் மெனு திறக்கவும் மூடவும்.
Pause கீயுடன் – சிஸ்டம் ப்ராப்பர்ட்டீஸ் டயலாக் பாக்ஸ் திறக்கப்படும்.
D கீயுடன் – டெஸ்டாப் காட்டப்படும். அப்போது இயங்கும் புரோகிராம்கள் அனைத்தும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும். மீண்டும் அழுத்த, புரோகிராம்களின் விண்டோ கிடைக்கும்.
M கீயுடன் – அனைத்து விண்டோக்களும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும்.

Shift + M கீகளுடன் – சுருக்கப்பட்ட புரோகிராம் விண்டோக்கள் திரைக்கு மீண்டும் வரும்.
E கீயுடன் – கம்ப்யூட்டர் திறக்கப்படும்.
F கீயுடன் – பைல் அல்லது போல்டர் தேட
Ctrl + F கீகளுடன்– நெட்வொர்க்கில் இருந்தால், கம்ப்யூட்டரைத் தேட
L கீயுடன் – கம்ப்யூட்டரை பூட்டி வைக்கும். அல்லது பயனாளரை மாற்றும்.
R கீயுடன் – Run டயலாக் பாக்ஸ் திறக்கப்படும்.
T கீயுடன் – டாஸ்க்பாரில் உள்ள புரோகிராம்களுக்கு ஒவ்வொன்றாகச் செல்லும்.
நம்பர் கீயுடன் – டாஸ்க் பாரில் பின் செய்யப்பட்ட புரோகிராம்களுக்கு. அதன் வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராம் செல்லும்.

Shift + நம்பர் கீயுடன் – புரோகிராமின் இன்னொரு இயக்கம் திறக்கப்படும்.
எந்த எண் கீ பயன்படுத்தப் படுகிறதோ, அந்த எண் வரிசையில் உள்ள புரோகிராம் திறக்கப்படும்.
Ctrl + நம்பர் கீயுடன் – எண் கீ அடிப்படையில், டாஸ்க்பாரில் உள்ள வரிசைப்படி, இறுதியாக இயங்கிக் கொண்டிருந்த புரோகிராமிற்குச் செல்லும்.
Alt + நம்பர் கீயுடன் – எண் கீ அடிப்படையில், வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராமினை இயக்க ஜம்ப் லிஸ்ட் திறக்கப்படும்.
Ctrl+B கீயுடன் – நோட்டிபிகேஷன் ஏரியாவில் மெசேஜ் காட்டிய புரோகிராமிற்கு மாறும்.
Spacebar கீயுடன் – டெஸ்க்டாப் பிரிவியூ கிடைக்கும்.
Up Arrow கீயுடன் – விண்டோ பெரிதாக்கப்படும்.
Left Arrow கீயுடன் – திரையின் இடது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும்.
Right Arrow கீயுடன் – திரையின் வலது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும்.
Down Arrow கீயுடன் – இயங்கும் விண்டோ மினிமைஸ் செய்யப்படும்.
Home கீயுடன் – இயங்கும் விண்டோ தவிர மற்ற அனைத்தும் மினிமைஸ் செய்யப்படும்.
Shift + Up Arrow கீயுடன் – விண்டோ திரையின் மேல் கீழாக இழுத்து வைக்கப்படும்.




## காது குடையும் பட்ஸ் வடிவில் புதிய வகை ஹெட்போன்

JBL J22i என்ற புதியவகை ஹெட்போன் அமெரிக்க சந்தையில் தற்போது அறிமுகமாகியுள்ளது. இதன் விலை $59.95 ஆகும்.



இதன் மூலம் செல்போனின் அழைப்புகள், பாடல்கள் மற்றும் அனைத்து வகை ஆடியோ வகைகளையும் துல்லியமாக கேட்கலாம். இதில் அமைந்துள்ள பின் ஒன்றை சட்டைப்பையில் மாட்டிக்கொண்டு காதில் சொருகிக்கொண்டு உபயோகிக்கலாம். அமெரிக்க மக்கள் இந்த வகை ஹெட்போனை மிகவும் விரும்பி வாங்கிக்கொண்டிருப்பதாக தெரிகிறது. பயணத்தின் போதும், அலுவலகத்தில் வேலை செய்யும்போது இந்த வகை ஹெட்போன் மிகவும் உபயோகமாக இருப்பதாக இதை உபயோகித்தவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது தேவையில்லாத வெளியுலக சத்தத்தை நிறுத்திவிட்டு, அவசியமானதை மட்டும் கட்டுப்படுத்தி நமக்கு கேட்க வைக்கும். இது மிக எளிதான் எடையில் சிலிக்கானில் அமைந்திருப்பதால் உபயோகிப்பதும் மிக எளிது.

## Samsung அறிமுகப்படுத்தும் Galaxy 070 ஸ்மார்ட் செல்பேசி

சம்சுங் நிறுவனமானது தனது புதிய வடிவமைப்பான Samsung Galaxy 070 எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகப்படுத்தவிருக்கின்றது. கூகுளின் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியானது 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Dual Core Processor, WVGA தொடுதிரை ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. மேலும் கூகுள் பிளே ஸ்டோருக்கு இசைவாக்கம் உடையதாக அமைந்துள்ளதோடு, வயர்லெஸ் வலையமைப்பு தொழில்நுட்பமான Wi-Fi, பிரதான மற்றும் துணைக் கமெராக்களையும் உள்ளடக்கியுள்ளது.








சந்தேக நபரொருவரின் இருப்பிடத்தைத் துல்லியமாக அறிந்து கொண்ட புலனாய்வுப் பிரிவினர் அவர்தானா கொலையுடன் சந்தேகப்பட்டவர் என்பதில் தெளிவற்று இருந்தார்கள்.

ஏனெனில் ஏற்கனவே அவர்கள் ஒரு அனுபவத்தைப் பெற்றிருந்தார்கள். என்ன அனுபவம் என்றால் கொலை செய்யப்பட்ட கேதீஸின் கைகளிலிருந்து கைப்பற்றப்பட்ட மீள் நிரப்பு அட்டை பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளர் ஒரு பெண்ணாக இருந்ததும், அப்பெண்ணை பல நாட்களாக கண்காணித்த போது அப் பெண் எவ்விதமான சந்தேகங்களுக்கும் அப்பாற் பட்டிருந்ததுமே ஆகும்.

ஆகவேதான் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அக் கைத்தொலைபேசி தற்போது கொலையாளியிடம் தானா இருக்கின்றது? என்பதை அவர்கள் சந்தேகத்துடனேயே நோக்க ஆரம்பித்தார்கள்.

அத்துடன் மிகச் சரியாகத் திட்டமிட்டு செய்யப்பட்ட கொலை யொன்றின் போது பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசியை அக் கொலையாளி தன்னுடன் வைத்திருப்பானா? என்ற கேள்விகளே மேலோங்கி நின்றதால் அக் கைத்தொலைபேசி தொடர்பாக எவ்வித முடிவையும் மேற்கொள்ளாமல் இரகசிய அணியானது மாலை வேளையில் மிரிகானை நோக்கிப் பயணமானது.

மிரிகானையில் அவர்களால் அக் கைத்தொலைபேசி இயங்கிக் கொண்டிருக்கும் இடத்தைக் கண்டுகொள்வது அவ்வளவு ஒன்றும் கடினமான வேலையாக இருக்கவில்லை.

இரவின் பெரும்பகுதி அக் கைத்தொலைபேசி இயங்கிக் கொண்டே இருந்தது புலனாய்வாளர்களுக்கு மிக இலகுவாக அக் கைத்தொலைபேசியின் இருப்பிடத்தைக் கூறி விட்டது.

அதிகாலை 4 மணியளவில் நான்கு புலனாய்வுப் பிரிவினர் தொலைபேசி இயங்கிக் கொண்டிருக்கும் இடம் நோக்கி நகர்ந்தனர்.

அருகில் சென்றவுடன் திறந்திருக்கும் கடையொன்றில் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு ஒருவர் அவ்விடத்திலேயே நின்று கொள்ள ஏனைய மூவரும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து வரும் தகவல்களுக்கு ஏற்பத் தனித் தனியாக வீடொன்றை நோக்கி நகர்ந்தனர். அவ்வீடு சுமார் 4 பேர்ச் அளவில் கட்டப்பட்டிருந்த இரு படுக்கையறைகளைக் கொண்ட வீடாக இருந்தது.

புலனாய்வாளர்கள் மூவரும் நிற்கும் இடத்தையும் கைத்தொலைபேசி கடைசியாக இயங்கிய இடத்தையும் துல்லியமாக அளவிட்டுக்கொண்ட புலனாய்வுக் கட்டுப்பாட்டு அறை அவ்வீடுதான் என்பதை உறுதி செய்து கொண்டது.

காலை 5 மணியளவில் நால்வரும் தனித்தனியாகக் கட்டுப்பாட்டறைக்குத் திரும்பியிருந்தார்கள்.

அவ்வீட்டின் வெளிப்புறத் தோற்றங்களை வைத்துக் கணக்கிடும் போது புலனாய்வாளர்களுக்கு தாம் பயணிக்கும் பாதை சரியா? என்ற எண்ணம் மேலோங்கிக் கொண்டிருந்தது. எனினும் இயங்கிக் கொண்டிருக்கும் அக் கைத்தொலைபேசியைத் தொடர்ந்து இயங்க அனுமதில் புலனாய்வாளர்கள் அனைவரும் ஒன்று பட்ட முடிவிலேயே இருந்தார்கள். ஏனெனில் அக் கைத்தொலைபேசி அணையுமாயின் அடுத்ததடயம் அவர்களுக்கு கிடைக்குமா என்பது இரண்டாவது கட்ட நகர்வை அவர்கள் திட்டமிட்டார்கள். அதன்படி காலைவேளையில் அவ்வீட்டிற்குச் சென்று யாதாயினும் ஒரு விடயத்தைப் பேசிவிட்டு வருவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி காலை 8.30 மணியளவில் இரண்டு பேர் கொண்ட அணியொன்று காவல்துறை அலுவலகத்திலிருந்து அவ் வீட்டை நோக்கிப் பயணப்படத் தயாரானது.

எனினும் விசாரணைகளுக்குப் பொறுப்பான விறள் மிக்க காவல்துறை அத்தியட்சகரின் உள்எண்ணம் அவ்விருவரையும் அச்சந்தர்ப்பத்தில் அனுப்ப வேண்டாம் என்றே கூறிக் கொண்டிருந்தது. எனினும் அவர்கள் இருவரும் அவ் வீட்டை நோக்கிப் பயணப்பட்டனர். சுமார் பத்து நிமிடத் தாமதத்தில் 'அவர்கள் இருவரினதும் கைப்பேசிகள் ஒரு சேர அலறத் தொடங்கின.

அப் பேசியின் ஊடாக அவர்கள் பெற்றுக்கொண்ட செய்தி அவர்களை திரும்பவும் கட்டளைப் பீடத்தை நோக்கிப் பயணப்பட வைத்தது. உதவி அத்தியட்சகரின் உள்ளெண்ணம் வென்றிருந்தது.

அவரது உள்ளெண்ணப்படி முடிவை மாற்றிக்கொள்ளச் சாதகமாக அமைந்த காரணி எது 'தெரியுமா? கடந்த இரவில் பெரும்பாலான மணித்தியாலங்கள் அக் கைத்தொலைபேசி இயங்கிக் கொண்டிருந்தது. அதாவது அதிகாலை வரை யாரோ அக் கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டே இருந்தார்கள். அவ்வாறு அதிகாலை வரை பேசிக்கொண்டிருந்த நபர் பின்னிரவில் படுக்கைக்குப் போயிருந்தால் புலனாய்வாளர் காலை எட்டு மணியளவில் அவ்வீட்டினைத் தட்டினால் குறித்த நபர் எழுந்து வர வாய்ப்பிருக்காது. வேறு யாரோ ஒருவர் தான் கதவைத் திறப்பர். அதனால் புலனாய்வாளர்கள் மற்றொரு தடவை சந்தேக நபரைத் தேடிப் போக வேண்டியிருக்கும். எனவேதான் காலையில் அவ் வீட்டிற்குச் செல்லும் திட்டத்தை அத்தியட்சகர் மீளப் பெற்றிருந்தார்.

அடுத்த கட்டமாக எதைச் செய்தாலும் அச் செய்தி சந்தேகநபரை உசாரடையச் செய்துவிடும் என்பதால் நேரம் 10 மணியைத் தாண்டும் வரை அனைவரும் அமைதியாகக் காத்திருந்தார்கள்.

அந்த வீட்டின் அழைப்புமணி முதிர் காலை நேரத்தில் கத்தத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து உள்ளேயிருந்து குழந்தையொன்றை அன்புடன் அலாவும் ஓசை அந்தப் புதியவர்கள் இருவருக்கும் தெளிவாகக் கேட்டது.

சில நிமிடக் கரைப்பில் ஓசை எதுவுமின்றிக் கதவு மெதுவாக திறந்தது. முழுவதுமாகத் திறக்கப்படாமல் முகமொன்று அக்கதவின் ஊடே வெளித் தெரிந்தது. அந்த முகம்.........

அழகான இளம் தாயொன்றின் முகம்.... அந்தப் புதியவர்கள் இருவரும் தற்காலிகமாக வரவழைக்கப்பட்ட புன்னகையுடன் மிக இதமாக சிங்களத்தில் அவளுடன் பேசத் தொடங்கினார்கள்......

''உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும்......"

''இல்லை.. பறவாயில்லை... நீங்கள் புதியவர்கள் என நினைக்கின்றேன்" "சரியாகக் கண்டு பிடித்துவிட்டீர்கள்... ஆனால் பயப்பட வேண்டாம்... நாமொன்றும் கள்வர்கள் இல்லை'' ''அது.. எனக்குத் தெரியும்..கள்வர்கள் இந்த நேரத்தில் எனது வீட்டுக் கதவைத் தட்டி உள்ளே வர அனுமதி கேட்க மாட்டார்கள்.... அத்துடன் ........"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## காலிறுதியில் யங் ஒலிம்பிக்ஸ் அணிக்கு மீண்டும் ஓர் மாபெரும் வெற்றி

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் சுற்றுப்போட்டியில் முதலாவது காலிறுதி போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தை எதிர்த்து யங்கோட் ரெட் கழகம் மோதியது. இதில் யங் ஒலிம்பிக்ஸ் கழ்கம் 206 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற யங் ஒலிம்பிக்ஸ் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 49.3 பரிமாற்றங்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ரொகான் 59 பந்துகளுக்கு 56 ஓட்டம், பி.திலக்சன் 65 பந்துகளுக்கு 82 ஓட்டம், டிரோன்ஸ் 37 பந்துகளுக்கு 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.பந்து வீச்சில் யங் கோட் ரெட் கழகத்தின் சார்பில் லோகன் 2 விக்கட், காண்டீபன் 05 விக்கட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்

பதிலுக்கு களம் இறங்கிய யங்கோட் ரெட் கழகம் 26.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். நிரோஷன் 20, நிக்சன் 13 ஓட்டம் பந்து வீச்சில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தின் சார்பில் பிரதீஸ் 06 விக்கெட்டுக்களையும் டிரோன் 1 விக்கெட்டினையும் பெற்றுக் கொண்டனர்.



## அரையிறுதிக்குள் நுழைந்தது சோடியாக் கழகம்

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுறறுப் போட்டியில் சோடியாக் கழகம் 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.இரண்டாவது கால் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் சோடியாக் மற்றும் வேல்ஸ் அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வேல்ஸ் விளையாட்டுக் கழகம் 47.3 பந்து பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றுகொண்டது.இவ் அணி சார்பாக கெ.சதீஸ்குமார் 69, மகேஸ்வரன் 51, ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சோடியக் கழகத்தின் சார்பில் சுபுன் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் லசிந்து 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சஞ்ஜீவ 16 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் பெற்றுகொண்டனர்.

215 என்ற இலக்குடன் களம் புகுந்த சோடியாக் விளையாட்டுக் கழகம் 43.4 பந்துபரிமாற்றங்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 215 ஓட்டங்களை பெற்றது. லசிந்து ஆட்டம் இழக்காமல் 73, இந்திக 26, ஜேகாசித 14, சின்னா 18, சுபுன் 16 ஓட்டங்கள் பெற்றனர். பந்து வீச்சில் வேல்ஸ் கழகத்தன் சார்பில் சி.பிரதீபன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும். எம்.அஸ்லம் 35 ஓட்டங்களுக்கு 2விக்கட்டுக்கயும், வி.தேவவிதுரன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் சரித்தனர்.

இதன் மூலம் சோடியாக் விளையாட்டுக் கழகம் 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று அரையிறுத்திக்கு தெரிவாகி உள்ளது.



# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் - 5
# "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

- ஆசிரியர் -

இரண்டு நல்ல விடயங்கள் நடந்தேறின எனக் கடந்த வாரம் தெரிவித்திருந்தேன்.

அவற்றில் முதலாவது விடயம் திருமலை நகர லியோ கழக இளைஞர்கள் தமது சேவையை மலைமுரசுடன் இணைத்துக் கொண்டிருந்தனர். நகர லியோ கழகத்தின் உறுப்பினர் செந்தூரன் அக்காலத்தில் பிரதி ஆசிரியராக இருந்த பவித்ரனால் மலைமுரசிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தார். எனினும் அவர் தனிப்பட்ட முறையில் மலைமுரசின் ஆரம்பக்கட்ட வளர்ச்சிக்காகக் கடுந் தொண்டா ற்றியிருந்தார். தொண்டு என நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் எவ்விதமான எதிர்பார்ப்புக்களுமின்றி ஒரு தலையாய பணியாக இச் சேவையைச் செய்யமுனைந்திருந்தமையாலேயே அவ்வாறு இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

மூதூரின் கட்டைப்பறிச்சான் மற்றும் சேனையூர்ப் பிரதேசங்களில் மலைமுரசைக் கொண்டு சேர்த்த பெருமையுடன் மலைமுரசில் எல்லைக்கல் என்ற பகுதியைத் தொடங்கி சுமார் 40 பதிப்புக்களுக்குத் தொடர்ந்து எழுதிவந்த பெருமையையும் அவர் கொண்டிருந்தார்.

ஒரு வரலாற்றாய்வாளனாக உருவாகுவதற்கு மிகப் பொருத்தமானவர்களுள் ஒருவரான அவர், தேச நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கணக்கீட்டுத் துறையில் கல்வி பயில்வது கவலைக்கிடமானதே.

மலைமுரசின் 14வது பதிப்பில் செந்தூரனுடன் மற்றொரு லியோக்கழக அங்கத்தவரான பா. சுதர்சன் (சுதன்), எழுத்துப்பிழைகளைக் களைவதற்காக, மலைமுரசுடன் இணைந்தார்கள். அடுத்து 16வது இதழுடன் மேலும் இரு லியோ இளைஞர்கள், வி.தனுசாந்த் - நி.இர்சாத், ஆகிய இருவரும் இணைந்தார்கள். எனினும் 19வது பதிப்பில்தான் லியோக் கழகம் பத்திரிகைகளை வினியோகிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

அவ் இளைஞர்களின் தொண்டின் பெறுமதியும் மலைமுரசின் வளர்ச்சியில் அளவிடமுடியாப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

அவர்களது செயற்பாடுகளைப் படிப்படியாக மலைமுரசு உள்வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் மலைமுரசு தனது 25வது பதிப்பைத் தாண்டியது. அன்றைய நாளின் மலைமுரசின் இரவை அவர்கள் ஒளியூட்டினார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஏனெனில் 25வது பதிப்பின் இரவை அவர்கள் எமக்குத் தெரிவிக்காமலே சிறியதொரு விழாவாகக் கொண்டாடினார்கள். ஒரு சிறிய கேக் ஓரிரு 'கோக்' குளிர்பானப் போத்தல்கள், காரப்பொரிக்கலவை (மிக்ஸர்), முறுக்கு ஆகியவற்றுடன் அவ்விழா அமைந்திருந்தது. அன்றைய தினம் அவ்வாறானதொரு உற்சாக ஊக்கி நிச்சயமாக எனக்குத் தேவையாக இருந்தது.

அவர்கள் அனைவரும் கையெழுத்திட்ட காலிக்கோப்பை யொன்றை நினைவுப் பரிசாக எமக்கு அளித்தார்கள். மலைமுரசு தனது முதலாவது பரிசை அவர்களின் கைகளால்ப் பெற்றுப் பெருமிதம் அடைந்தது.

18வது இதழில் இருந்து செலவைக் குறைப்பதற்காக பத்திரிகைகளை மடிக்கும் பொறுப்பையும் நாமே பதிப்பாளர்களிடமிருந்து ஏற்றுக் கொண்டோம். பத்திரிகைகளை மடிப்பதென்பது அவ்வளவு ஒன்றும் இலகுவான காரியமாக, நாம் நினைத்ததைப் போல, இருக்கவில்லை.




சரியான உயரமான மேசைகளின்மையால் 1000 பதிப்புக்களையும் மடித்து முடிக்கும் போது முதுகுவலியை அனைவரும் உணர்ந்தோம். என்றாலும் கூட 42வது இதழ் வரை அந்தச் செயற்பாட்டை லியோ இளைஞர்களுடன் தொடர்ந்து கொண்டே இருந்தோம்.

19வது பதிப்பிலிருந்த பத்திரிகையினை வடிவமைக்கும் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன். பத்திரிகையின் வடிவமைப்பு என்பதில் (லேஅவுட்-Lawout) கவனம் செலுத்துமாறு மலைமுரசின் ஆர்வலர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்கவே அப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதுவரை நாளாந்தம் செய்திகளையும், கட்டுரைகளையும் தட்டச்சிட்டுச் சரிபார்த்து வைத்துக்கொள்ளும் நாம் வெள்ளிக்கிழமை அதிகாலையில் அத்தொகுப்பைக் கொண்டு பத்திரிகையின் பக்கங்களில் அடுக்கும் பொறுப்பை பவித்ரனும் பதிப்பிற்குப் பொறுப்பான லக்ஸ்மனும் செய்து முடிப்பார்கள். வெள்ளிக்கிழமை மாலை சுமார் 3 மணியளவில் செய்திகள் பத்திரிகையின் பக்கங்களில் அடுக்கப்பட்டுத் தயாராக எனது பார்வைக்கு வந்துவிடும். அதனை இறுதியாகப் பார்த்த பின் பதிப்பிற்கு இலத்திரனியல் அஞ்சலிடுவோம்.

அப்போதெல்லாம் பத்திரிகையின் வடிவத்தில் கவனஞ்செலுத்த முடியாமலே போய்க்கொண்டிருந்தது. அதனால் அப்பிரச்சனையிலிருந்து விடுபடுவதற்காக அதன் வடிவமைப்பையும் பொறுப் பேற்றுக் கொண்டேன்.

அப் பொறுப்பையும் ஏற்ற பின்னர்தான் பத்திரிகையினைக் கவர்ச்சிகரமாக எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிச் சிறுகச் சிறுகத் தெரிந்து கொண்டோம்.

எனினும் முழுமையா வடிவமொன்றின் இலக்கணங்கை தற்போதுவரை கற்றுக்கொள் வில்லையோ என்ற சந்தேகம் அடிக்க எம்முள் விளைவதுண்டு. அதன் வெளிப்பாடாக தற்போதும், 54வது பதிப்பின் பின்னரும் கூட, பத்திரிகை அச்சிட்டு வெளியாகி கைக்கு வந்தவுடன் நான் கேட்கும் கேள்வி "எப்பிடி இருக்கு?"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### நுவரெலியாவில் சீன நிறுவனத்தின் விளையாட்டு கட்டடத் தொகுதி.

நுவரெலியாவில் விளையாட்டு கட்டடத்தொகுதி ஒன்றை கட்டுவதற்கு சீனாவின் நிறுவனம் ஒன்று கட்டட உரிமத்தை பெற்றுக்கொண்டுள்ளது. இக் கட்டடத் தொகுதிக்கான செலவு 115 மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 15 பில்லியனுக்கு அதிகம் என எதிர்பாக்கப்படுகிறது.

இத் தொகுதியில் 400m, 200m ஓட்ட சுவடுகளும் 400m இயற்கை ஓட்ட சுவடுகளும், இரண்டு பார்வையாளர் அரங்கமும், ஒரு கிரிக்கட் மைதானமும், ஒரு உள்ளக மைதானமும், நீச்சல் தடாகமும், பயிற்சி நிலையங்களும் காணப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

### வடமாகாண தேர்தல் வேட்பாளர் மரணம்

வடமாகண சபைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இருந்த சுயேச்சை குழு 4 இன் வேட்பாளர் ஒருவரின் சடலம் சுன்னாகம் கோயில் ஒன்றினுள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் பெயர் வி. இராமச்சந்திரன் எனவும் வயது 72 எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### சுறாமீன் அழிப்பில் இலங்கை முதல் 20 இடங்களில்....

சுறாமீன்களை வேட்டையாடுவதில் இலங்கை உலகின் முதலிருபது இடங்களுக்குள் இருப்பதாக சர்வதேச ஆய்வு தெரிவிக்கின்றது. இவ்விருபது நாடுகளும் சுறாமீன்களைப் பிடிப்பதில் 80 வீதத்தை நிரப்புகின்றன எனத்தெரிவித்துள்ள அவ் ஆய்வு சுறாமீன்கள் பிடிக்கப்படுவது இனிமேல் தடைசெய்யப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்தாலேயே இனிவரும் காலங்களில் சுறாமீன்களைப் பாதுகாக்க முடியும் என அவ் ஆய்வில் ஈடுபட்ட நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இப்பட்டியலில் 14வது இடத்தில் காணப்படுகின்றது.

### றொவ்ஹானியின் அங்குரார்பணத்தில் இலங்கையின் இரு அமைச்சர்கள்...

ஈரானிய புதிய ஜனாதிபதியாக ஹசன் றொவ்ஹானின் பதவியேற்பு வைபவத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் , பெற்றோலியத்துறை அமைச்சர் அனுரபிரியதர்சன யாபா ஆகியோர் தெஹ்ரான் செல்கின்றனர்.

இவ் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்ட போதும் அவரால் சமூகமளிக்க முடியாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

### விமான எந்திர அறையில் சேதம்

பண்டார நாயக்க சர்வதேச வானூர்தித் தளத்தில் தரையிறங்கிக் கொண்டிருந்த வேளை ஸ்ரீலங்கா எயாலைன்ஸ்க்கு சொந்தமான ஏ340 விமானத்தின் பிரதான எந்திர அறையில் ஒலிப்பதிவகம் சேதமடைந்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக பிரான்ஸின் பி.இ.ஏ.க்கு அறிவித்திருப்பதாக சிவில் வான்பரப்பு நிர்வாகி ஜெனரல் எச்.எம்.சி. நிமல்சிறி தெரிவித்துள்ளார். பி.இ.ஏ. என்பது விபத்துக்களின் போது பாதுகாப்பு புலனாய்வை மேற்கொள்ளும் அமைப்பு ஆகும்.

### வாகனக் கடத்தலை தடுத்தது சுங்கம்

இணையத்தின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வாகனங்களை இலங்கைக்குள் கடத்திவந்த முயற்சிகளைச் சுங்கத் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது.

அதற்காக உருவாக்கப்படாத கம்பனியொன்றின் பெயரை இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கியொன்று பயன்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வாகனமொன்றின் சந்தைவிலையை விட சுமார் 300,000 ரூபாய்கள் குறைவாக விற்கப்படும் என இணையத்தளத்தில் விளம்பரஞ் செய்து கொள்வனவாளர்களைக் கவர்ந்துள்ள இக் கம்பனியானது கடந்த ஆறு மாதங்களாக இலங்கைக்குள் வாகனங்களைக் கடத்தி வந்துள்ளதுடன் அவ் வாகனங்களுக்குச் செலுத்த வேண்டிய மில்லியன் கணக்கான ரூபாய்களை ஏய்ப்புச் செய்துள்ளது என்றும் சுங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### எகிறும் தேர்தல் செலவுகள்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்காக மேலதிகமாக 20 மில்லியன் ரூபாய் செலவழிக்கப்பட உள்ளது என தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இத் தொகையானது வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபை தேர்தலுக்கு செலவிடப்படும் 1500 மில்லியன் மொத்த தொகையிலும் மேலதிகமானது என பிரதி தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர் எழிலனின் மனைவி தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக வட மாகாணத்தில் போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் தமிழீழ விடுதலை புலிகளின் முன்னாள் உறுப்பினரான தயா மாஸ்டர் அரசாங்கம் சார்பாக தேர்தலில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப் பட்ட போதும் இறுதி தேர்தல் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப் படவில்லை.

### போக்குவரத்து காவல்துறையின் புதிய சுற்றுநிருபம்

போக்குவரத்து காவல் துறையினர் வாகனங்களில் வரும் ஓட்டுனர்களுக்கு தெரியாவண்ணம் மரங்களிலோ அல்லது கட்டிடங்களுக்கு அருகிலோ அல்லது வீதிமுகரிகளிலோ நின்று மறிக்க கூடாது என காவல்துறைமா அதிபர் என். கே இளங்ககோன் சுற்றுநிருபம் பிறப்பித்துள்ளார்.

காவல்துறைமா அதிபருக்கு கிடைத்த சில முறைப்பாடுகளுக்கு பின்பே ஓட்டுனர்களுக்கு காவல்துறையினர் தெரியும் வண்ணம் நின்று மறிக்க வேண்டும் என்ற சுற்றுநிருபம் பிறப்பித்துள்ளார்.

### பதினேழு வயது மாணவன் பலி

வெலிவெரிய கலவரத்தில் அகில டினேஸ் எனும் 17 வயது மாணவன் இராணுவ வீரர்களின் துப்பாக்கி சூட்டில் கடந்த வியாழக்கிழமை கொல்லப்பட்டார். அகில கடுவல - பலமகர பிரதான வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் நின்றபோது அவனைத்தாண்டி சென்ற இராணுவத்தின் துப்பாக்கி சூட்டிலேயே கொல்லப்பட்டான். உறவினர் ஒருவர் தெரிவிக்கையில் " அகிலவின் அம்மாவின் வங்கிக்கணக்கில் அரசாங்கம் 1 மில்லியன் ரூபாய் வைப்புச் செய்திருக்கிறது என்றால் அகிலவின் வாழ்வின் பெறுமதி 1மில்லியன் தானா? " என கேள்வி எழுப்பியுள்ளார்.

### பிரித்தானிய தமிழர்களின் கோரிக்கையை புறக்கணித்தது பிரித்தானியா

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான உச்சிமாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது என பிரித்தானிய தமிழர்களின் கூட்டமைப்பு கேட்டுக் கொண்ட கோரிக்கையை, பிரித்தானிய அரசு நிராகரித்துள்ளது.

பிரித்தானியாவை தளமாக கொண்ட தமிழ் தலைவர்கள் சிலர் இலங்கை சீரான அரசியலுக்கு எதிரானது என அமைச்சருக்கு விளக்கமளித்துள்ளனர். பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கான நிரல் பிரித்தானிய மகாராணியால் கையொப்பமிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## The Sunday LEADER

### மீண்டும் பதவி ஏற்க நீதிமன்றம் உத்தரவு

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் குழாமில் இடம்பெற்ற நீதிபதிகளான மொகான் பீரிஸ், சந்திர ஏக்கநாயக்க, மற்றும் எலவன சுந்தா ஆகியோர் விசாகா வித்தியாலயத்தில் பாலர் பிரிவின் தலைவராக முடித மடநாயக்க என்பவரை உடனடியாக மீண்டும் பதவியேற்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்திரவிட்டுள்ளனர்.

### மிருகபலி தொடரும்

முன்னேஸ்வரத் தலத்தில் நடைபெற்றுவந்த மிருகபலி இம்மாதமும் நடைபெறும் என முன்னேஸ்வரத் தல பிரதம குரு தெரிவித்துள்ளார். அரசிற்கு இவ்விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

### பொதுநலவாய மாநாட்டின் ஊடாக முதலீடு

பொதுநலவாய மாநாட்டினை இலங்கையில் நடத்துவதன் ஊடாக வெளிநாட்டு முதலீட்டை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை தாம் கொண்டிருப்பதாக முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கென விஷேட தகவல் வழங்கும் நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் ஊடாக பொதுநலவாய மாநாட்டிற்கு வருகைதரும் தரப்பினருக்கு இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்புக்களை வழங்கவுள்ளது. தற்போது வரை 31 அழைப்புக்களைப்பெற்றுள்ள இத்தகவல் நிலையம் அவ் அழைப்புக்களில் உல்லாசப் பிரயாணம், ஆடைத்துறை, வாகனம் பொருத்துதல் கைத்தொழில், இரும்புருக்குத்துறை, எண்ணைவளத்துறை போன்றவை தொடர்பான முதலீட்டு விளைவுகளும் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

### "செய் அல்லது செத்துமடி" முயற்சியில் விடுதலைப் புலிகளின் வலைப்பின்னல்

பொதுநலவாய மாநாட்டை தவிர்க்குமாறு உலகத்தலைவர்களை வலியுறுத்தி வரும் விடுதலைப்புலிகளின் வலைப்பின்னல் தமது இறுதிநேர முயற்சியில் இறங்கியுள்ளதென வெளிவிவகார மேற்பார்வைக்கான பாராளுமன்ற உறுப்பினர் சயின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். உலகத்தலைவர்களை நோக்கி நாடுகடந்த தமிழீழ அரசின் அங்கத்தவர்கள் " செய் அல்லது செத்துமடி " என்ற இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமது முயற்சிகளை இரட்டிப்பாக்கியுள்ள அவ்வமைப்பின் அங்கத்தவர்களும் ஐக்கிய இராச்சியத்தின் வெளிவிகார அமைச்சரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதாக கூறியிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

### தீர்வுக்குத் தொடரும் ஐ.தே.க பிரச்சனைகள்

ஐக்கிய தேசியக்கட்சியின் உள்ளக பிரச்சனைகள் தொடரலாம். அடுத்துவரும் 10 வருடங்களுக்கு ஐ.தே.கவினால் ஆட்சியை பெற்றுக்கெள்ள முடியாதென ஐக்கிய தேசியகட்சியின் ,உறுப்பினர் தயாஸ்ரீ ஜெயசேகர தெரிவித்துள்ளார். ரணில் 2014 ம் ஆண்டில் ஐக்கிய தேசியகட்சி ஆட்சியைபிடிக்கும் என்று கூறுவது வெறும் கனவு என அவர் மேலும் தெரிவித்தார். ரணில் மேலும் 6 வருடங்களுக்கு தனது தலைமைப்பதவியை நீடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் 65 பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியைவிட்டு தாவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### வெலிவேரிய நீர் ஆராய்சி அறிக்கை இன்று வெளியாகும்.

வெலிவேரியவின் குடிநீரில் அடையாளம் காணப்படாத இரசாயப் பதார்த்தம் கலந்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அறிக்கை வெளிவரும் எனத் தெரியவந்துள்ளது. தொழித்துறை தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் இவ்வறிக்கையினை வெளியிடவுள்ளது.

அந்நிறுவனம் வெலிவேரிய மற்றும் அதை அண்டியுள்ள பிரதேசங்களில் உள்ள கிணற்று நீரினை பெற்று இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 03

24. நைதரசன் வாயுவின் உபயோகம் அல்லாதது எது?
    1. ஐதரசீன் தயாரிப்பில் பயன்படுகிறது.
    2. வானூர்திகளின் டயரை நிரப்ப பயன்படுகிறது
    3. எண்ணெய் சேமிப்பு தாங்கிகளில் ஒட்சிசனை அகற்றப் பயன்படுகிறது
    4. பொலிவைனல் குளோரைட்டு தயாரிப்பில் பயன்படுகிறது.

25. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
    1. கம்பமேலணி 2. கனமேலணி 3. படைகொண்ட மேலணி
    4. பிசிர் மேலணி

26. $30^\circ c$ யின் பெறுமானத்தை $K$ (கெல்வினுக்கு) மாற்றுக.
    1. $273.15K$ 2. $361.15K$ 3. $303.15K$ 4. $342.15K$

27. கீழ்வரும் பொருட்களில் நிறப்பூச்சுக்கள் தயாரிக்கும் போது பச்சை நிறத்திற்கு காரணமான இரசாயன பொருள் எது?
    1. $TiO_2$ 2. $PbCrO_4$ 3. $Cr_2O_3$ 4. $C$ தூள்

28. $H_{2(g)} + Br_{2(g)} \to 2HBr$ வெப்ப உள்ளுறை மாற்றத்தைக் கணிக்க.

$H_2 \to 2H \qquad \Delta H = +436KJ$

$Br_2 \to 2Br \qquad \Delta H = +193KJ$

$H + Br \to HBr \qquad \Delta H = -350KJ$

    1. -63 $KJ$ 2. -73 $KJ$ 3. -71 $KJ$ 4. -74 $KJ$

29. சிறுநீரகத்தில் அதீத வடிகட்டலுக்காக கொண்டுள்ள சிறப்பியல்பாக அமையாதது எது?
    1. அதிகளவு குருதி மயிர்க்குழாய்களைக் கொண்டிருத்தல்
    2. குருதி மயிர்க் குழாய்கள் மடிப்படைந்த நிலையில் காணப்படல்
    3. உட்காவுப் புன்னாடியின் விட்டம் வெளிக்காவுப் புன்னாடியின் விட்டத்திலும் பார்க்க பெரியது.
    4. உட்காவுப் புன்னாடியின் நீளம் வெளிக்காவுப் புன்னாடியின் நீளத்திலும் பார்க்க குறைந்தது.

30. ஊதிக்கட்டப்பட்ட பலூன் ஒன்றினை கல்லினில் கட்டி ஆழமான நீர்நிலை ஒன்றினுள் வீசப்படுகின்றது. இங்கு பலூனில் தொழிற்படும் அமுக்கத்திற்கும் கனவளவிற்கும் இடையிலான தொடர்பை சரியாகக் காட்டுவது?




31. கோதுமைத் தாவரத்தில் புகுத்தப்படும் நீள்மூஞ்சிவண்டுக்கு எதிர்ப்புத்திறன் உடைய நுண்ணங்கி எது?
    1. *Basillusthuringiensis* 2. *Basillus bulgaricus*
    3. *Thiobacillusferroxydars* 4. *Streptomyces griseus*

32. மோட்டார் வாகனமொன்று ஓய்விலிருந்து புறப்பட்டு $3ms^{-1}$ எனும் ஆர்முடுகலுடன் $20s$ கள் பயணித்தது. மோட்டார் வண்டி பயணம் செய்த தூரம் எவ்வளவு?
    1. $200m$ 2. $300m$ 3. $600m$ 4. $250m$

33. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?
    1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
    2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
    3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
    4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்

34. 2006 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் எத் தடிப்பிலும் குறைவான பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டது?
    1. $30\mu$ 2. $20\mu$ 3. $35\mu$ 4. $25\mu$

### பாடம் - கணிதம், 03

22. $4x+6y=30,\ 2x+4y=20$ எனும் இரு ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்காமல் $x+y$ இன் பெறுமானத்தைக் காண்க.

23. $-3 \le x \le 3$ எனும் சமனிலியைத் திருப்தி செய்யக்கூடிய $x$ இன் இரு முழு எண் பெறுமானங்களை எழுதுக.

24. 4, 8, 12, 16 .......... என்ற கூட்டல் விருத்தியில் 18வது உறுப்பைக் காண்க.

25. எழுவாயாக்குக. $y = 2\pi\sqrt{\frac{l}{g}}$ இல் $g$ யை.

26. 1. இம்முக்கோணியின் பக்கங்களைத் தொடர்புபடுத்தி $x$ இல் சமன்பாடு அமைக்கவும்.




    2. $x$ இன் பெறுமதியைக் கணிக்க.
    3. இம் முக்கோணியின் பரப்பளவைக் கணிக்க.

27. கமலாவின் வயதின் மூன்று மடங்குடன் விமலாவின் வயதைக் கூட்ட 7 கிடைக்கும். கமலாவின் வயதின் இரு மடங்கிலிருந்து விமலாவின் வயதைக் கழிக்க -2 கிடைக்கும். எனின், ஒருங்கமைசமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் கமலா மற்றும் விமலாவின் வயதுகளைக் காண்க.

28. பின்வரும் சமன்பாடுகள் நிறைவர்க்கமானதா என கூறவும்.
    1. $x^2-9x+\frac{81}{4}$ 2. $x^2-\frac{7}{2}x+\frac{9}{4}$
    3. $x^2-5x-36$ 4. $x^2-4xy+4y^2$

29. பின்வருவனவற்றை இரு தசமதானத்திற்கு வர்க்கமூலப்படுத்துக.
    1. $\sqrt{503}$ 2. $\sqrt{1002}$ 3. $\sqrt{27}$

30. சுருக்குக.
    1. $\frac{2y-4}{2}+\frac{y}{6}$ 2. $1011_2+1001_2+101001_2$

## சென்ற வார விடைகள்

11. 1. $\frac{2.2+0.1}{2.0}=\frac{2.3}{2}=1.15$ 2. $\frac{a^2\times 3a^3\times b^5}{2^5\times b^7}=\frac{3a^5}{2^5\times b^2}$

    3. $\frac{6a^2\times 4b^3}{3a^2\times b^2}=8a^2\times b$

12. $x^2+\frac{7}{2}xy+\frac{7}{2}xy+\frac{49}{4}y^2=x(x+\frac{7}{2}y)+\frac{7}{2}y(x+\frac{7}{2}y)=(x+\frac{7}{2}y)^2$

13. $(x+\frac{1}{x})^2=a^2 \Rightarrow x^2+2\times x\times\frac{1}{x}+\frac{1}{x^2}=a^2 \Rightarrow x^2+2+\frac{1}{x^2}=a^2$

$\Rightarrow x^2+\frac{1}{x^2}=a^2-2$

14. $(m+n)^2=81 \Rightarrow m^2+2mn+n^2=81 \Rightarrow m^2+n^2=81-10 \Rightarrow m^2+n^2=71$

15. இருகுழாய்களும் 5செக்கனில் நிரப்பும் நீரின் அளவு $=125+100=225ml$

$\therefore$ $8100l$ நீரை நிரப்ப தேவையான நேரம் $=\frac{8100000ml}{225ml}=36000=50h$

16. $\frac{2s}{n}=a+l \Rightarrow l=\frac{2s}{2}-a$

17. $24a^2b^2$

18. 1. 65 2. 65

19. 1. குறித்த விலை $=15000\times\frac{120}{100}=18000$
    2. விற்ற விலை $=18000-10\%=18000-1800=16200$
    3. இலாபம் $=16200-15000=1200$
    சதவீதம் $=8\%$

20. $100101_2$

21. உருவின் பரப்பளவு

$=2\pi r^2+2\pi rh=(2\times\frac{22}{7}\times\frac{21}{2}\times\frac{21}{2})+(2\times\frac{22}{7}\times\frac{21}{2}\times 21)$

$=2\times\frac{22}{7}\times\frac{21}{2}(\frac{21}{2}+21)=66\times\frac{63}{2}=2079\ cm^2$

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி3* *பாடம் - வரலாறு*

1. 2ம் உலகமகாயுத்த முடிவில் ஜப்பானுக்கு சுதந்திரம் வழங்கும் சன்பிரான்சிஸ்கோ மாநாட்டில் புத்தரின் போதனையை தலைப்பாகக் கொண்டு உரையாற்றிய இலங்கையர்
   1. J.R.ஜெயவர்த்தன 2. D.S.சேனநாயக்க
   3. அநாகரிக தர்மபால 4. சேர்.ஜோன் கொத்தலாவல

2. இலங்கையில் முதன் முதலில் கோப்பித்தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடம்
   1. சிலாபம் 2. சிங்கப்பிட்டி 3. மொரட்டுவ 4. போகம்பர

3. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார விளைவு அல்லாதது
   1. பெருந்தெருக்கள், புகையிரதப்பாதை அமைப்பு
   2. தேயிலை, போல்பிக், இறப்பர் தோட்டம் ஆரம்பிப்பு
   3. தோட்ட தொழிலாளர், நகர்ப்புறத் தொழிலாளர், வர்த்தகம் உருவானமை
   4. கொழும்புத்துறைமுகம் சர்வதேச துறைமுகமாக விரிவடைந்தமை

4. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்று எது?
   1. வண்ணார்பண்ணையில் ஆங்கிலப்பாடசாலை ஒன்று ஆரம்பித்தமை
   2. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை
   3. சைவ பரிபாலன சபையினை ஆரம்பித்தமை
   4. பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தமை

5. 'அ' நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் 'ஆ' இல் உள்ள தலைவர்களின் பெயர்களை இணைக்கும் போது வரும் சரியான விடை

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. ஆயுதம் ஏந்திய சுதந்திரப் போராட்டம் | A. மகாத்மா காந்தி |
| 2. ஒத்துழையாமை இயக்கம் | B. முட்சுஹிதோ |
| 3. கலாசாரப் புரட்சி | C. சுபாஸ் சந்திரபோஷ் |
| 4. மேஜிஜி சீர்திருத்தம் | D. டொகுகாவா இயாஷு |
| | E. மா ஓ சேதுங் |
| | F. சௌ-என்-லாய் |

1. ACFB 2. CAEB 3. CAFD 4. FAED

6. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கான உடனடிக் காரணமாக அமைந்தது
   1. அல்சேஸ் - லொறைன் பிரச்சினை
   2. சரஜிவோ நிகழ்ச்சி
   3. பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை
   4. பேர்ள் துறைமுகம் தாக்கப்படல்

7. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் ஒரு விளைவு எனக் கருதப்படுவது எது?
   1. சர்வதேச சங்கத்தின் தோற்றம்
   2. ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்
   3. வேர்செயில்ஸ் உடன்படிக்கை
   4. ஐரோப்பாவின் பேரரசுகள் பல அழிந்தமை

8. முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்குபெறுவதற்கான உடனடிக்காரணம்
   1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
   2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
   3. நீர்மூழ்கிக் கப்பலின் மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்குள்ளானமை
   4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

9. பின்வருவனவற்றில் நிரந்தர உறுப்பு நாடுகளை தன்னகத்தே கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு எது?
   1. பொதுச்சபை 2. பாதுகாப்புச்சபை
   3. சமூகப் பொருளாதாரச் சபை 4. நம்பிக்கைப் பொறுப்புச் சபை

10. ரஷ்யாவில் பெரஸ்ரொய்கா – கிளாஸ்நொட்ஸ் எனும் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய தலைவர் யார்?
    1. ஜோசப் ஸ்டாலின் 2. நிகிடா குருஷேவ் 3.மிஹயில் கொர்ப்சேவ்
    4. பொரிஸ் யெல்ட்சின்

11. உலக மகாயுத்தங்களின் போது ஐரோப்பிய நாடுகளுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்த ஐரோப்பிய நாடுகளுள் அடங்காத நாடு எது?
    1. பெரிய பிரித்தானியா 2. ஐக்கிய அமெரிக்கா 3. பிரான்சு 4. ஜேர்மனி

*ஆசிரியர் :*
**த. அகிலன்,** Dip. in Tech. (Merit)
*புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை*
*வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப்பாட ஆசிரியர்*

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் 27

பிரதீபா

1. குமாரும், சரத்தும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். இவர்களிடையே ஒரு போதும் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதில்லை. எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்பர். இதற்கு எதிரான விளக்கம் தரும் உவமைத் தொடர் எது?
   1. பூவும் மணமும் போல 2. சாடிக்கேற்ற மூடி போல
   3. கீரியும் பாம்பும் போல
2. வைத்தியசாலையில் அதிகமாக இருக்க வேண்டியவர்கள்
   1. நோயாளிகள் 2. தாதிகள் 3. வைத்தியர்கள்
3. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். இங்கு முயற்சிக்கு ஒத்த பொருள் தரக்கூடிய சொல் எது?
   1. உயர்ச்சி 2. ஊக்கம் 3. திறமை
4. எந்தக் காலத்தையும் காட்டாத சொல் எது?
   1. பாடு 2. ஓடினான் 2. வருவாள்
5. நிலைபேறான காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?
   1. ஒலிபெருக்கி 2. மின்பாரந் தூக்கி 3. மின்மணி
6. இலங்கையின் தேசிய கீதத்திற்கு இசையமைத்தவர் யார்?
   1. ஹரீஸ் ஜெயராஜ் 2. தென்னக்கோன் 3. ஆனந்த சமரக்கோன்
7. சனுஜன் 2ம் தவணை பரீட்சையில் கணித பாடத்தில் ரவியை விட அதிக புள்ளிகளைப் பெற்ற போதிலும், கமாலை விட குறைவான புள்ளிகளையே பெற்றான். எனினும் கமாலும், ஜோனும் சமமான புள்ளிகளைப் பெற்ற போதிலும், ராஜன், ஜோனை விட அதிக புள்ளிகளைப் பெற்றான். இம்மாணவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர் யார்?
   1. கமால் 2. ஜோன் 3. ராஜன்
8. துர்நாற்றமுடைய பூ எது?
   1. வாடா மல்லிகை 2. எருக்கலை 3. ரோசா
9. ஆண் பூவும், பெண்பூவும் தனித்தனியாக காணப்படும் தாவரம் அல்லாதது?
   1. பப்பாசி 2. கித்துள் 3. தாமரை
10. தர்மி, கனி, துஷாந் ஆகியோர் நிறுத்தாடுவளையில் அமர்ந்திருக்கும் இரு விதங்கள் உருக்களில் தரப்பட்டுள்ளது.




நிறுத்தாடுவளைகளில் அமர்ந்துள்ள மாணவர்களில் நிறை கூடிய மாணவன் யார்?
   1. தர்மி 2. கனி 3. துஷாந்

11. ஒருவன் உந்துருளியில் பயணம் செய்யும் போது கதிமானி 60 கிலோமீற்றர் மணித்தியாலம் எனக் காட்டியது. உந்துருளி பயணம் செய்யும் வீதியில் எதிர்த்திசையில் மணித்தியாலத்திற்கு 30கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுகின்றது. எனில், உந்துருளி பயணம் செய்யும் உண்மையான வேகம் மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர்?
    1. 90 2. 40 3. 30
12. 35 இனிப்புக்களின் விலை ரூபா 50 எனின், 70 இனிப்புக்களின் விலை யாது?
    1. ரூபா 100 2. ரூபா 98 3. ரூபா 100.10

**பின்வரும் தகவலை வாசித்து 13, 14 ற்கு விடையளிக்குக.**

ஓர் நீளமான வாங்கில் ஏழு மாணவர்கள் அமர்ந்துள்ள விதம் கீழே தரப்பட்டுள்ளது.
பாபுவுக்கும், சாமுவுக்கும் இடையே கோபு அமர்ந்துள்ளான்.
முன்பக்கத்திலிருந்து நான்காவதாக சாம் அமர்ந்துள்ளான்.
பின்பக்கமிருந்து ஐந்தாவதாக ராமு அமர்ந்துள்ளான்.
கோபுவுக்கு வலது பக்கம் நான்காவதாக ராசு உள்ளான்
ராசுவுக்கும் சாமுவுக்கும் நடுவில் சனு உள்ளான்.

13. வாங்கின் பின்பக்கமாக கடைசியாக இருப்பவர் யார்?
    1. பாபு 2. ராமு 3. சுதா
14. வாங்கின் நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?
    1. ராமு 2. சாம் 3. சனு

பெயர்: ..............................................
..............................................
முகவரி: ..............................................
..............................................
..............................................
பாடசாலை: ..............................................

## ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

கடந்த வார வினாக்களுக்கான விடைகள் - 26ம் பயிற்சி

1. 1 2. 1 3. 2 4. 3 5. 3 6. 2 7. 2 8. 1 9. 1
10. 2 11. 2 12. 1 13. 1 14. 2 15. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்மணிக்காக .....

# பொருளீட்டுவதில் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமை

இஸ்லாத்தில் பொருளியல் திட்டத்தில் ஒரு பெண் சொந்தமாகச் சொத்துக்களை வைத்திருக்கவும், சம்பாதிக்கவும் முதலீடு செய்யவும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவும் எந்தவித தடையும் இல்லை பெற்றோர் கணவன் ஆகியோரிடம் இருந்து வாரிசுரிமை அடிப்படையில் சொத்துக்களை பெற்று முழுமையாக அனுபவிக்கவும் முழுச்சுதந்திரமுண்டு. பாலியல் ரீதியில் ஒரு பெண் முழுமையான திருப்தியைப் பெறவும் உரிமை பெற்றிருக்கிறாள். கணவனைத் திருப்திப் படுத்துவது போல் மனைவியும் முழுத்திருப்தியடைதல் வேண்டும். இயற்கையான தேவைகளை புறக்கணித்து வாழ இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை.

இஸ்லாமிய சட்டவியலில் பெண்கள் கல்வி மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. வெறுமனே வீடோடு அடங்கி அறிவில்லாமல் வாழும்படி இஸ்லாம் பெண்களுக்கு அறிவுரை கூறவில்லை. குழந்தைகளின் ஆரம்ப பாடசாலை என்ற விதத்தில் தாய் நல்ல கல்வியறிவைப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும். மிக முக்கிய நிகழ்வுகளின் போது நபி (ஸல்) அவர்கள் பெண்களுக்கு போதனை நிகழ்த்தியுள்ளார்கள். நபியவர்களது மனைவி ஆயிஸா (ரழி) பிரபல போதனை ஆசிரியராவார்.அவர்களிடம் பாடங்கற்க ஸஹாபாக்கள் சமூகம் தருவர். கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லீம்களினதும் கடமையாகும். இது ஒரு நபி மொழியாகும்.

ஒரு பெண்ணின் கௌரவம், கற்பு ஆகியன மதிக்கப்படல் வேண்டும் உயிரினும் மேலாக கற்பை மதிக்கும் பெண்கள் அதற்கு இழுக்கு ஏற்படும் போது தம் உயிரைக்கூட மாய்ந்துவிடத் துணிகின்றனர். இந்நிலையினைத் தவிர்ப்பதற்கும் கற்பு பேணப்படுவதற்கும் இஸ்லாம் என்ன கூறுகிறதோ அதன் படி நாம் நடப்போம்.

விபச்சாரம் காழ்ப்புணர்ச்சி குறித்து குற்றம் சாட்டும் ஒருவர் நான்கு சாட்சிகளை கொண்டுவருவது கட்டாயமாகும். அவ்வாறு முறைப்படும் நபருக்கு எண்பது(80) கசையடிகள் வழங்கப்படல் வேண்டும். இது இஸ்லாத்தின் தீர்ப்பாகும். அதன் பின் அவ்வாறான சாட்சி ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

இவ்வாறான பிரச்சனை ஒன்றை கணவன் கொண்டுவரின் அதனை உறுதிப்படுத்த நான்கு சத்தியங்கள் செய்யவேண்டும். என்பதோடு ஐந்தாவதாக தான் பொய்கூறின் அல்லாஹ்வின் சாபம் தன்மீது இறங்குமெனப் பகிரங்கமாக கூற வேண்டும். மனைவி அதனை மறுத்துரைக்கும் அதிகாரம் பெற்றவளாவாள். நான்கு முறை சாட்சிகூறி தான் நிரபராதி என்பதனை உறுதிப்படுத்தலாம்.

அதன் பின்பு இவர்கள் இருவருக்கும் இடையே நிரந்தரப் பிரிவு ஏற்பட்டு விடும். இருவருக்கும் மறுமணம் அனுமதிக்கப்படும். ஒரு பரஸ்பர நம்பிக்கையிலமைந்த சூழல் ஒன்றிலேயே திருமண உறவு தொடரும் என்பதை நாம் அவ்விடத்தில் நினைவிலிருத்த வேண்டும். நாங்கள் அல்லாஹ்வை பார்க்கா விட்டாலும் அல்லாஹ் எங்களைப்பாத்துக் கொண்டிருக்கிறான் என்ற மனப்பாங்கு ஒவ்வொரு முஸ்லிமான ஆண்கள், பெண்கள் மீது வரவேண்டும். நாங்கள் மனம் போனபோக்கு வாழமுடியாது மறுமை நாளில் நாங்கள் கைசேதப்படுவோம். இந்த பாவச்சூழலில் எங்களை அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்.

சமூகத்தில் பெண்களின் பங்களிப்பை கருத்திற்கொண்டு பெண்கள் தொழிலில் ஈடுபடலாம். கல்வித்துறை, வைத்தியத்துறை ஆகியன முஸ்லீம் பெண்கள் கட்டாயம் ஈடுபடவேண்டிய தேவையுள்ளது. இது குறித்து இஸ்லாம் ஆர்வமூட்டியுள்ளது. நபிகளது காலத்திலே பெண்கள் போர்க்களத்திற்குச் சென்று வைத்தியத்தேவைகளையும், வீரர்களுக்கான உதவி ஒத்தாசைகளையும், நிறைசேற்றி வைத்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. எனவே பெண்கள் இஸ்லாம் பொருளீட்டுவதில் என்ன விடயங்களை கூறுகின்றதோ அதன்படி நாம் நடக்கவேண்டும்.

ஜாபிர் முஹம்மட் றாபி
ஆலஞ்சேனை.

## நாளொரு நபி மொழி

மரணமும் அதன் கொடூரமும்

மரணத்தின் கஷ்டம் ஓர் அரிய உபதேசமாகும்.

முன்னூறு தடவை வாளால் வெட்டுவதற்கு நிகரானது தான் மரணத்தின் கஷ்டம் என்றும், இன்னும் மரணத்தின் கடினமும் சிரமமும் எனது சமுதாயத்திற்கு உபதேசமாகும். என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹஸ்ரத் ஹஸன் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள்.

எந்த ஒரு அறிவார்ந்த மனிதனும் மூன்று விஷயங்களை மறந்துவிடக் கூடாது.

01. உலகம் இன்னும் அதன் நிலைகளின் அழிவை.
02. மரணம்
03. எந்த சோதனைகள் மற்றும் கஷ்டங்கள் நிம்மதியளிக்காதோ அத்தகைய வேதனைக்குரிய விடயங்கள்

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் க.:.ப் (ரலி) அவர்களிடம் மரணத்தின் நிலையைப்பற்றி சற்று விவரியுங்கள் எனக்கூறினார்கள். அதற்கு க.:.ப் (ரலி) அவர்கள் கூறினார்கள் " மரணம் என்பது முற்கள் நிறைந்த ஒரு செடியைப் போன்றதாகும். அதை மனிதனின் முதுகிலிருந்து உடலுக்குள்ளே நுழைக்கப்பட்டு உடலின் எல்லா நரம்புகளிலும் அந்த முற்கள் பதிந்து விட்டு பிறகு அதை ஒரு பலம் வாய்ந்த ஒரு மனிதன் மிகவேகமாக பிடித்து இழுத்தால் அந்த முற்கள் நரம்புகளையும், தசைகளையும் அறுத்து கிழித்துக்கொண்டு எவ்வாறு வெளியே வருமோ அது போன்றுதான் மரணத்தின் நிலையுமாகும்.

அக்கரைச்சேனை
பாத்திமா ராஜா நிபார்.

## கிழக்கின் இப்தார் நிகழ்வுகள்





திருகோணமலை தலைமையக காவல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்பதார் நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேட்ட பிரதிக் காவல்மா அதிபர் புஜித ஜெயசுந்தர கலந்து கொண்டு சிறப்பித்தார்.
நோன்பு திறக்கும் நிகழ்வில் மத ஒற்றுமையை பிரதிபலிப்புதற்காக பௌத்த. கிறிஸ்தவ மதகுருமார்களும் கலந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது..

## நூல் வெளியீட்டு நிகழ்வு

மூதூரைச் சேர்ந்த முறாசிலினால் எழுதப்பட்ட 'முஸ்லிம்களும் சமகாலப் பிரச்சினைகளும் சில பதிவுகள்: பாகம்-1' ஏனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 2013.08.11ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) மூதூரில் இடம்பெறவுள்ளது.

மூதூர் அல்- ஹிதாயா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஓய்வு பெற்ற அதிபரும் எழுத்தாளருமான ஏ.நயிமுத்தீன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நூல்அறிமுக உரையை எழுத்தாளர் ஏ.எஸ்.உபைதுல்லாவும் (அதிபர்) நூல் ஆய்வுரையை உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி.எம்.முஸ்ஸமிலும் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் வெளியீட்டு உரையை ஊடகவியலாளர் ஆர்.எப். அரூஸ் வழங்கவுள்ள அதே வேளை நேயம்,குரல் ஆகிய செய்தி இதழ்களின் ஆசிரியர் எம்.எஸ்.எம். நியாஸின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. விழா நிகழ்வுகளை எழுத்தாளர் ஏ.எஸ்.அப்துல்லா (ஆசிரியர்) தொகுத்து வழங்கவுள்ளார். இதன்போது நூல் முதல் பிரதியை முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.தௌபீக் பெற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிய வருகிறது. மூதூர் முறாசில் ஒரு ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.





கல்முனை தௌஹீத் அமைப்பினரால் அல் ஹுதா திடலில் 08.09.2013ல் புனித நோன்பு பெருநாள் தொழுகை இடம்பெற்ற போது அங்கு பெருநாள் தொழுகையில் ஈடுபட்டுள்ள வர்களையும், பெருநாள் குத்பா நிகழ்த்தப்படுவதையும் படங்களில் காணலாம்.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில் கத்தி ....

கொழுவித் தூக்கிச் சித்திரவதை செய்யப்பட்டுளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, 03ம் திகதி மாலை வேளையில் கடலுக்குப் புறப்பட்டுச் சென்ற இவர்கள் 04ம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் இலங்கைத்துறை, தாழையடிக் கடற் பரப்பிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை அதிவேகப் படகொன்றில் முதலில் வந்தவர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் மேலும் ஆறு படகுகள் இவர்களது படகைச் சுற்றிவளைத்துக் கடுந் தாக்குதலை மேற்கொண்டதுடன் எந்திரத்தையும் வெட்டிச் சேதமாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் சுமார் 150 கிலோ மீன். கணவாய், இறால் போன்றவற்றை அள்ளிச் சென்ற கும்பலில் இருந்த ஒருவரை அடையாளம் கண்டு கொண்டதாய் கூறிய தாக்குதலுக்கு இலக்கானவர் அத் தகவலைக் காவல்துறைக்கு வழங்கியு ள்ளதாகத் தெரிவித்தார்.

தாக்குதலின் பின்னர் இயந்திரம் இயங்காத நிலையில் உறவினர்களை அழைத்தே தாம் கரைக்குத் திரும்பியதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக தகவல்களைத் திரட்டியபோது இம் மீனவர்கள் தடைவிதிக்கப்பட்ட வலைகளை மீன்பிடிக்குப் பாவித்தாகவும், அவ்வாறு செய்ய வேண்டாம் எனப் பலமுறை எச்சரிக்கப் பட்டிருந்ததாகவும் சிலர் தெரிவித்து ள்ளனர். எனினும் தாக்குதல் நடந்த அன்று அவ்வகை வலைகளைப் பாவித்தார்களா? எனத் தமக்குத் தெரியாது என்றும் தெரிவித்தனர்.

## படகு விபத்தில்...

மனைவி மற்றும் குழந்தைகளுடன் மேலும் சில உறவினரும் பயணம் செய்ததாகவும் அவர்களில் ஒருவரிடமிருந்து மட்டும் தகவ்ல கிடைத்துள்ளதாகவும் அவர் தகவலளித்த பின்னரே தாம் அனைவருக்கும் இவ் அனர்த்தத்தைத் தெரிந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

அவர்கள் இலங்கையிலிருந்து மலேசியாவிற்கு விமானம் மூலம் சென்றதாகவும், அங்கிருந்து சில நாட்களில் படகு மூலம் இந்தோனேசியா சென்றதாகவும், பின்னர் இந்தோனேசியாவிலிருந்து ஆஸி நோக்கிப் பயணிக்கும் போதே விபத்தடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

09.08.2013லும் ஒரு தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்களான மக்களை அவுஸ்திரேலிய அரசு பப்புவா நியூகினியா நோக்கி அனுப்பியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(உதயா - )

## கடாய்...

கந்தளாய், ரஜஎல , யூனிட்4, பகுதியைச் சார்ந்த முஸ்லிம் பெண்ணொருவரின் வீட்டிற்குள்ளே சுமார் 3 அடிக்கு கிடங்கு தோண்டப்பட்டு பலிப் பூசை ஆரம்பித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் கைதாகியுள்ளனர்

புதையலுக்குரிய பலியை நடத்த வந்த பூசகர் பதுளையையும் அவரின் மூன்று சீடர்கள் மல்வானைப் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. கந்தளாய் காவலர்கள் மேலதிக விசாரணையை மேற்கொண்டு செல்வதுடன் இச்சம்பவம் கடந்த 05ம் திகதி இடம்பெற்றுள்ளது.

(மரியதாஸ்)

## விற்பனையிலிருந்து . . .

என பொன்ரேறா பிராண்ட்ஸ் லங்கா லிமிட்டெட், மக்களை ஏமாற்றும் வகையில் விளம்பரங்களை வெளியிடுவதை தடுக்க வேண்டுமென நுகர்வோர் விவகார அதிகார சபையை கட்டாயப்படுத்தும் இடைக்கால தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் 09.08.2013ல் வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு பிரதம நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் நீதியரசர் டப்ளியு.எம்.எம். மாலினி குணரத்ன ஆகியோரை கொண்ட நீதியரசர்கள் குழுவே இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த மனுவை கே.எஸ். சுமரசிங்க தாக்கல் செய்திருந்தார்.

டீ.சி.டீ என்பது மெலமைன் தயாரிப்பு, மெதுவாக நைதரசனை விடுவிக்கும் உரங்கள், தீயணைப்பு இரசாயனங்கள்,பிசின் வகைகள், சாயமிடுதல், தோல் மற்றும் இறப்பர் பதனிடல், வெடிமருந்துகள், மருந்து தயாரிப்பு என்பவற்றுக்காக பயன்படுத்தப் படும் உயிர் பிரிகையடையும் இரசாயனமாகும்.

டீ.சி.டீ யின் படிவுகள் 2012 இல் நியூஸிலாந்தில் முதல்தடைவையாக காணப்பட்டது எனவும் ஆயினும், பொன்ரேறா இதை இரகசியமாக வைத்திருந்தது எனவும் மனுதாரர் கூறியுள்ளனர்.

டீ.சி.டீ பாதுகாப்பான நுகர்வுக்குரியது. என நியூஸிலாந்திலேயோ நியூலாந்து பால்மாவை இறக்குமதி செய்யும் நாடுகளிலோ அறிவிக்கப்படவில்லை யென அவர் கூறினார்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை, பொன்ரேறாவின் தவறான, மக்களை ஏமாற்றும் வகையிலாக செயற்பாடு களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென கட்டளை பிறப்பிக்க வேண்டுமெனவும் மனுவில் கேட்கப பட்டிருந்தது.

இந்த தடையுத்தரவை ஓகஸ்ட் 21 வரை வலுவானது என அறிவித்த நீதிமன்றம் இந்த வழக்கை ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தது.

### பரிசோதனை வசதி எம்மிடம் உண்டு - ITI நிறுவனம்

அதேவேளை இலங்கை பால்மாக்களில் அடங்கியுள்ள டீ.சீ.டீ எனும் நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப் பதற்குத் தேவையான அனைத்து ஆய்வுக்கூட வசதிகளும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஐ.ரி.ஐ) உள்ளன என் இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

டீ.சீ.டீ நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இலங்கையில் இல்லை என்று ∴ பொன்ரேறா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளது.

பொன்ரேறா நிறுவனத்தின் செய்திக்கு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள ஐ.ரி.ஐ நிறுவனம், 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மற்றும் நவம்பர் காலப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொன்ரேறா நிறுவனத்தின் பால்மா உற்பத்திகள் இன்னமும் சந்தைகளில் விற்பனைக்காக உள்ளன என்றும் இவற்றிலேயே அதிகளவில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் கலந்திருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் அறிவித்து ள்ளது.

இலங்கையிலுள்ள பரிசோதனை நிலையங்களில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இல்லை என்று பொன்ரேறா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றை பல்வேறு ஊடகங்களும் பிரசுரித் திருந்தன.

ஐ.ரி.ஐ நிறுவனம் மேற்படி இரசாயனம் தொடர்பில் நடத்திய பரிசோதனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந்த அறிவிப்புக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள ஐ.ரி.ஐ நிறுவனம், டீ.சீ.டீ பரிசோதனை மாத்திரமன்றி டீ.சீ.டீ பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெலமைன் பரிசோதனைக்குரிய வசதிகளும் அவற்றை பரிசோதிப்பதற்கான விசேட உபகரணங்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களும் தங்களது நிறுவனத்தில் காணப்படுகின்றனர் என்றும் ஐ.ரி.ஐ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பால்மாக்களில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் கலந்திருப்பதாக தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து அவற்றைக் கண்டுபிடிப்பதற்காக சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் இரு முறைமைகளில் ஒரு முறையினைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உலகிலுள்ள எந்தவொரு விஞ்ஞான கூடமும் இந்த முறையினைக் கடைப்பிடிக்க முடியும் என்றும் ஐ.ரி.ஐ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில், இந்த பரிசோதனைக்காக "ஹை.ஃபர்போமன்ஸ் லிக்விட் க்ரொமொ டொக்ரெ.ஃப்" என்ற இரசாயன பரிசோதனை முறை பயன்படுத்தப்படுகிறது. அகில உலக சான்றுபெற்ற விஞ்ஞானகூடம் அமைந்துள்ள ஐ.ரி.ஐ நிறுவனத்தின் பரிசோதனைகள் மற்றும் அதற்கான சான்றிதழ்கள் போன்றன சரியானவை என்று சர்வதேச நாடுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால்மாக்களின் மாதிரிகள் தற்போது பரிசோதனை களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அதன் மூலம் பொன்ரேறா நிறுவனத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மற்றும் நவம்பர் காலப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு இப்போதும் சந்தைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பால்மாக்களில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.ரி.ஐ நிறுவனத்தின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

தாய்லாந்து, சிங்கப்பூர் அல்லது வேறு நாடொன்றில் இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அந்த பரிசோதனை அறிக்கை அல்லது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பால்மா மாதிரிகளை தங்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஐ.ரி.ஐ நிறுவனம், பொன்ரேறா நிறுவனத்திடம் கோரியு ள்ளது.

## அட்டாளைச்சேனை..

குறித்த கடிதத்தில் அட்டாளைச் சேனை, ஓட்டமாவடி மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களை ஜெய்க்கா திட்டத்தில் இணைத்துக்கொள்ளும்படி முதலமைச்சரால் கையொப்பமிடப்பட்டு உத்தரவு இடப்பட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையிலேயே தான் செயற்பட்டு அட்டாளைச்சேனை பிரதேச சபையிடமிருந்து திட்ட முன்மொழிவுகளைப் பெற்று செயற்படுமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

தவிர தான் தான்தோன்றித் தனமாக செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஆனால், முதலாவது பட்டியலிலும் சரி இரண்டாவது பட்டியலிலும் சரி அட்டாளைச்சேனை உள்வாங்கப்பட்டிருக்கவில்லை என்றும் இது வேண்டுமென்றே அதிகாரிகளால் செய்யப்பட்ட பிழையான வேலை என்றும் அமைச்சர் உதுமாலெப்பை குறிப்பிட்டார்.

இதன்போது இந்த வாக்கு வாதத்தில் நுழைந்த அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில், முதலமைச்சரின் உத்தரவு அமைச்சராலேயே கேள்விக்குட்படுத்து கின்ற அளவில் இருப்பது இந்த மாகாண அமைச்சரவையினையே கேள்விக்குட்படுத்துகின்றது என்றும், அட்டாளைசசேனையில் பிறந்த அமைச்சர் உதுமாலெப்பை தனது பிரதேசம், பட்டியலில் உள்ளவாங்கப் பட்டிருக்கவில்லை என்பதை சாதிப்பதிலேயே முழு பலத்தையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார் தவிர இதுவரை அட்டாளைச்சேனை பிரதேசத்தை இத்திட்டத்தில் உள்வாங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு வார்த்தையேனும் பேசாத அமைச்சர், முதலமைச்சரால் அட்டாளைச்சேனை உள்வாங்கப்பட வேண்டும் என விடுக்கப்பட்ட உத்தரவை அட்டாளைச் சேனையை உள்வாங்குவாதற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக முதலமைச்ருடைய உத்தரவு தவறானது என்று இங்கு வாதிட்டுக் கொண்டிருக்கின்றார். இவ்வாறெல்லாம் தனது சொந்த பிரதேச அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்றபோது தாயைக் காட்டிக் கொடுத்ததற்கு இது சமனானது என கூறுவதில் என்ன தவறிருக்கப்போகின்றது என்றும் சபையில் கேள்விக்கணை தொடுத்தார்.

முதலமைச்சரால் உத்தர விடப்பட்டு உள்வாங்கப்பட்ட ஏனைய பிரதேச சபைகள் திட்டத்திலிருந்து நீக்கப்படாதிருக்கின்ற அதேவேளை அட்டாளைச்சேனை பிரதேசம் மட்டும் நீக்கப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது எனவும் தன்னால் மாத்திரம் அல்லது தனக்கூடாக மாத்திம்தான் அபிவிருத்தி நடைபெற வேண்டும் என்ற மனப்பாங்கோடு ஏனைய எல்லா அபிவிருத்திகளையும் தடைசெய்வதானது தனது தாய் மண்ணை காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதன்றி வேறென்னவென்று கூறமுடியும் எனவும் தவிசாளர் எம்.ஏ.அன்ஸில் கேள்வி எழுப்பினார்.

அட்டாளைச்சேனை பிரதேசம் உள்வாங்கப்பட வேண்டும் என்பதில் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், அட்டாளைச்சேனை பிரதேசம் தெரிவு செய்யப்பட்டதாக உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்து அது தொடர்பில் மக்களிடம் சென்று முன்மொழிவுகளைப்பெற்ற தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மக்களிடம் மீண்டும் சென்று எதனைக் கூறுவது எனவும் கேள்வி எழுப்பினார். இவ்விடயத்தில் அட்டாளைச்சேனை உள்வாங்கப்பட வேண்டும் என்பதற்காக மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் மிகுந்த ஆக்ரோசமாக ,ங்கு வாதிட்டார். இருந்தபோதும் அட்டாளைச்சேனை பிரதேசம் குறித்த திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கான தீர்மானமெதுவும் இறுதிவரைக்கும் எட்டப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக் கடற்பரப்பில் விசேட ரோந்து



கிழக்குக் கடற் பரப்பின் ஊடாக சட்டவிரேதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பெருமளவில் தற்போது பயணிக்க எத்தனித்திருப்பது தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அப் பயணங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக கிழக்கு கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்பவர்களைத் தடுக்கும் செயற்றிட்டமொன்றின் கட்டமாகவே இந்த அதிகரித்த ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுள்ளன. அதன் மற்றொரு கட்டமாக கடலில் மீன் பிடிக்கும் இடங்களைத் தெளிவாகக் காட்டக் கூடிய அடையாள மிதவைகளை கருங்குடாப் பகுதியில் கடற்படையினர் விதைத்துள்ளனர்.

இம் மிதவைகள் மீனவர்களுக்கு இலகுவான வழிகாட்டியாகத் திகழுமென்பதுடன் மீன் பிடிப்படகுகளைத் தாண்டிப் பயணிக்கும் படகுகளை தெளிவாக அடையாளங் காட்டக் கூடியதாகவும் இருக்கும்

தலா ஒரு தொன் நிறைகொண்ட இம் மிதவைகள் ஐந்து, கடலில் வழிகாட்டிகளாக இடப்பட்டுள்ளன.

## நோன்புப் பெருநாள் சர்ச்சை

நோண்புப் பெருநாளை வியாழக்கிழமை கொண்டாடும் முடிவை எடுத்ததால் கிண்ணியா ஜம்யத்துல் உலமாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அகில இலங்கை ஜம்யத்துள் உலமா அறிவித்துள்ளதாக "தமிழ்மிரர்" செய்தித்தளம் தெரிவிக்கின்றது.

அகில இலங்கை ஜம்யத்துள் உலமாவின் கிளை அமைப்பாகவே கிண்ணியா சபை இருப்பதால் அகில இலங்கை ஜம்யத்துள் உலமா எடுக்கும் முடிவுகள் அனைத்திற்கும் கிண்ணியா ஜம்யத்துள் உலமா கட்டுப்பட வேண்டும் என்றே அச் செய்தியிணையம் மேலும் தெரிவிக்கின்றது.

எனினும் பிறை கிண்ணியாவில் கடந்த புதன்கிழமை தென்பட்டதை அடுத்து அவர்கள் பெருநாள் தொழுகைணை நிகழ்த்தியிருந்தனர். அதன்படி வியாழக்கிழமையே அங்கு பெருநாள் கொண்டாடப்பட்டதுடன் கிழக்கின் ஏனைய சில பகுதிகளிலும் பெருநாள் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## திருமலை சமாதுப்பிள்ளையார் ஆலய தேர்ப்பவனி





திருஞானசம்பந்தர் வீதியில் தேர் : யாழ்-பொய்க்கால் குதிரை அணி



## புதையல் தோண்ட முயன்றோர் கைது

கொக்கட்டிச்சோலையில் புதையல் தோண்ட முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் நிமித்தம் ஏழுபேர் காவல்துறையால் கைதாகியுள்ளனர்.

தாந்தாமலைப் பிரதேசத்திலேயே இம் முயற்சியை அவர்கள் முன்னெடுத்திருந்தார்கள் என்று காவல்துறை தெரிவித்துள்ளதுடன் அவர்களில் ஆசிரியர் ஒருவரும், தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த நால்வரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கின்றது.

## மலைமுரசின் அம்பாறைப் பயணம்

கடந்த வாரம் மலைமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் முதற்தடவையாக அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், கல்முனை மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களுக்கு மேற்கொண்ட வருகையின் போது அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் மற்றும் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத மாவட்ட வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் கே.எல்.எம்.நக்பர் மற்றும் தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் (நுஜா) ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் ஆகியோருடன் மலைமுரசு பத்திரிகை தொடர்பிலான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டார்.



இச்சந்திப்பில் தவிசாளர் அன்ஸில், டாக்டர் நக்பர் மற்றும் நுஜா அமைப்பின் தலைவர் அறூஸ் ஆகியோரினால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை குறிப்பிட்டவர்களினால் மலைமுரசு வாராந்த பத்திரிகையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை வழங்குவதாகவும் அவர்கள் உறுதியளித்திருந்தனர்.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

## மாணவப் பத்திரிகையாளர்களுக்கு மலைமுரசின் முதற்கட்டப் பயிற்சி

மலைமுரசின் வலைப்பின்னலில் மாணவப் பத்திரிகையாளர்களாக திருகோணமலையில் இணைந்து கொண்ட பதினைந்து மாணவப் பத்திரிகையாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி கடந்த 06ம் திகதி மலைமுரசின் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைநெறிப் பீடாதிபதி கலாநிதி.சி.ரகுராம் அவர்களும், மலைமுரசின் பிரதம ஆசிரியரும் அவ் அறிமுகப் பயிற்சியை வழங்கியிருந்தனர்.


## முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை

**வேல் சிறுவர் பாடசாலைக்கு இரண்டு முன்பள்ளி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.**

முன்அனுபவம் / பயிற்சி அற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு - 0777559738


## மகுடம் ஆண்டு மலர் வெளியீட்டு விழா

மட்டக்களப்பிலிருந்து காலாண்டுக்கு ஒருமுறை வெளியாகும், கவிஞர். மைக்கல் கொலின் அவர்களை ஆசிரியராக "மகுடம்" சஞ்சிகையின் ஆண்டு மலர் வெளியீடு 11.08.2013 அன்று மட்டக்களப்புப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 10.30 மணிக்கு நிகழவுள்ளது.

"தமிழ்த்தூது" தனிநாயகம் அடிகளாரின் சிறப்பிதழாக வெளியாகவுள்ள மகுடம் ஆண்டுமலரின் வெளியீட்டு விழாவினை "செங்கதிரோன்" த. கோபால கிருஸ்ணன் தலைமை ஏற்று நடாத்தவுள்ளார்.

பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலர் (நிர்வாகம்) திருமதி கலாமதி பத்மராஜாவும், கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு.க.மகேசன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மண்முனை வடக்குப் பிரதேசச் செயலர் திரு.சீ.கிரிதரனும், மட்டு மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. இரா. நெடுஞ்செழியனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையினை கிழக்கிழங்கைச் சிற்றிதழ்கள் ஒன்றிய செயலாளர் திரு.த.இன்பராசா நிகழ்த்த வெளியீட்டுரையினை மலைமுரசின் பிரதம ஆசிரியர் ஸ்ரீஞானேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். விமர்சனவுரையினை வவுணதீவின் பிரதேசச் செயலாளர் திரு.வெ.தவராஜா நிகழ்த்தச் சிறப்புரையாகிய "ஈழத்துச் சிற்றிலக்கிய வரலாற்றில் மட்டக்களப்பும் மகுடமும்" என்ற தலைப்பில் முன்நாள் வடகிழக்கு மாகாண உதவிக் கலாசாரப் பணிப்பாளர் திரு.செ. எதிர்மன்னசிங்கமும் உரையாற்றவுள்ளனர்.

நன்றியுரையினை மகுடம் சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர். மைக்கல் கொலின் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

திருகோணமலை நகர வினியோகப் பிரதிநிதிகள் : நகர லியொ கழகம், 306 C1

இப்பத்திரிகை இல: 159A, கடல்முக வீதி திருகோணமலையிலுள்ள ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org